# பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் ராஜினுமா! ஹீத்புதிய பிரதமராகிருர்

Reg'stered as a News Paqer in Ceylon
விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamll Daily

தபால் பெட்டி எண்: 49
போன் : 389

மலர் 12
இதழ் 129
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆனி 6 ரபி. ஆகிர் 15 சனிக்கிழமை [20-6-70]

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18·00 | ரூ. 4·00 |
| 6 மாதம் | ரூ. 34·00 | ரூ. 7·50 |
| 1 வருடம் | ரூ. 66·00 | ரூ. 14 00 |

முற் பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

## கன்சவேட்டிவ் அமோக வெற்றி

லண்டன், ஜூன் 19

பிரிட்டிஷ் பொதுத்தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி அதிக பெரும்பான்மையான ஸ்தானங்களைப் பெற்று முழுமையான அரசாங்கத்தை அமைக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. பிரதமர் கரோல்ட்வில்சன் தமது பிரதமர் பதவியை ராஜினுமாச் செய்துள்ளார். கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் திரு. ஹீத் பிரதமமந்திரியாகப் பதவி ஏற்கவிருக்கின்ருர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்போது 7 முடிவுகள் வெளிவரவில்லை. அப்போது கன்சர்வேடிவ் கட்சி 328 ஸ்தானங்களையும், தொழிற்கட்சி 287 ஸ்தானங்களையும் கைப்பற்றியிருந்தன, லிபிரல் கட்சி 4 தொகுதிகளிலும், ஏனைய கட்சிகள் 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன.

தொழிற்கட்சியைச் சேர்ந்த தற்போதைய பிரதமர் வில்சன் மகாராணியிடம் தமது ராஜினுமாக் கடிதத்தைச் சமர்ப்பித்து விட்டார். திரு. ஹீத்தை புதிய அரசாங்கத்தை அமைக்கும்படி எலிசபெத் மகாராணி இன்று கோருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

(முன்னர் வந்த செய்தி 3-ம் பக்கம்)

# 24 உள்ளூராட்சி மன்றங்கள் ஆகஸ்டுக்கு முன் தேர்தல்

## வாக்காளர் பட்டியல் தயார்செய்ய உத்தரவு



கொழும்பு, வெள்ளி

24 உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் ஆகஸ்ட் மாதம் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுவருகிறது. நுவரேலியா கோட்டை, வத்தளை மாபோலை நகரசபை மற்றும் பட்டினசபை, கிராம சபையும் இவற்றில் அடங்கியுள்ளது.

14 மாவட்டங்களிலுள்ள 24 உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் பட்டியல்களைத் தயாரிக்கும்படி பொதுநிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நேற்று உத்தரவிட்டார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு கூட்டாட்சிக் கட்சிகளும் ஐக்கிய தேசியக்கட்சியும் தயாராகியிருக்கின்றன

வடபகுதியிலும் நடைபெறவிருக்கும் சில உள்ளூராட்சி மன்றத் தேர்தல்க... ...ட்சிரீதியில் அபேட்சகர்களை ...வது பற்றி ஆலோசனை செய்து வருகிறது. தமிழரசு தமிழ்க்காங்கிரஸ் கட்சிகளும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அபேட்சக... களை நிறுத்துவது பற்றி ஆலோசனை செய்துவருவ... அறியப்படுகிறது

## ‘பயமுறுத்தி கடிகாரம்-பணத்தை அபகரித்தார்’

வல்வெட்டித்துறை, வெள்ளி

‘எதிரி எனது சட்டை... பெறலாம் என்ற எண்ணத்தில் பொலிசாருக்கு அன்று...

‘நாடுமுன்னேற

### உற்பத்தி அதிகரிக்கவேண்டும்’

— தபாலமைச்சர்

வெள்ளவத்தை, வெள்ளி

“ஒரு நாடு முன்னேற வேண்டுமானுல் முதலில் அதன் உற்பத்தி அதிகரிக்க வேண்டும். கைத்தொழில் அபிவிருத்தியடைந்தால் நாடு தானுகவே சுபீட்சமடையும். ஆசிய உற்பத்தித் தினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில் எமது நாட்டு மக்கள் அனைவரும் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமைப்படவும் பொருளாதார சுபீட்சம் காணப் பாடுபடவும் வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்”.

இவ்வாறு தபா...ந்திப் போக்குவரத்து அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர், கொழும்பு தலைமை அஞ்சலகத்தில் நடைபெற்ற ஆசிய உற்பத்தி வருடம் 1970 ஞாபகார்த்த...திரை...

வடபகுதி

## தமிழ் பௌத்த ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படும்

### கல்வி மந்திரி வாக்குறுதி

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியிலுள்ள தமிழ்-பௌத்த பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு விரைவில் நியமனம் வழங்கப்படுமென்றும் கடந்த வருடம் ஜூன் மாதத்திலிருந்து சம்பளம் வழங்கப்படுமென்றும் கல்வி மந்திரி பதியூதின் மாமூத் நேற்று அவரை சந்தித்த தூதுகோஷ்டியிடம் வாக்குறுதியளித்தார்

பூநகரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தமிழ்-பௌத்த பாடசாலையான ஸ்ரீநந்தாராம வித்தியாலயம் அடுத்த மாதம் அரசாங்கத்தினுல் பொறுப்பேற்கப் படுமென்றும் கல்வி மந்திரி தெரிவித்தார்

இத்தூதுகோஷ்டியில் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் திரு ஜே ஆர் டேவிட் காரியதரிசி திரு. வி இரட்டாய், தனுதிகாரி திரு. எம் கனகரத்தினம், முன்னுள் கல்வி மா அதிகாரி திரு. டி ஜி குலத்துங்கா, திரு. பி. ஏச் டி சொய்ஸா ஆகியோர் சென்றிருந்தனர்

யாழ்ப்பாணப் பகுதியில் சிறுபான்மைத் தமிழர் படும் கஷ்டத்தைத் தான் நேரில் கண்டதாகவும் அவர்களின் கல்வி அபிவிருத்திக்குத் தமிழ்-பௌத்த ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும்படியும் திரு. டி ஜி குலத்துங்கா மந்திரியிடம் கேட்டுக்கொண்டார்

## பௌத்தகாங்கிரஸ் பிரதமரைச் சந்திக்கும்

கொழும்பு, வெள்ளி

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தூதுக்குழுவொன்று பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்... காக்கப்படவேண்டும், பௌத்தம் தேசிய மதமாக வேண்டும், இலங்கையரல்லாதோருக்கு காணி வளங்க இடமளிக்கக்கூடாது இராணுவத்தில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். என்பன

## சோயுஸ்-9 பூமிக்குத் திரும்பியது

மாஸ்கோ ஜூன் 19

சோவியத் விண்வெளிக் கலமான சோயுஸ்-9 18 நாட்கள் விண்வெளியில் சஞ்சரித்து விட்டு இன்று பத்திரமாக பூமியில் வந்திறங்கியது. 14 நாட்கள் மட்டும் விண்வெளியில் சஞ்சரித்து உலகசாதனையை ஏற்படுத்திய அமெரிக்காவின் சாதனையை சோயுஸ்-9 முறியடித்துள்ளது.

உலகை வலம்வந்த வீரர்கள் நிக்கலேயா, செபஸ்டியானே ஆகிய இருவரும் தேகாரோக்கியத் துடன் பூமிக்குத் திரும்பியுள்ள...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘பயமுறுத்தி கடிகாரம்-பணத்தை அபகரித்தார்’

வல்வெட்டித்துறை, வெள்ளி

‘எதிரி எனது சட்டை பொக்கற்றை தட்டிப்பார்த்து காசு தரும்படி கேட்டார். காசு இல்லையென்று சொன்னதும் மணிக்கூட்டைத் தரும்படி கேட்டார். தராவிட்டால் அடிக்கப் போவதாகச் சொன்னார். நான் பயந்து மணிக்கூட்டை கழற்றிக் கொடுத்து விட்டேன். மணிக்கூட்டை வாங்கியதும் ரூபா 25 தரும்படியும் அல்லது 2 போத்தல் சாராயம் தரும்படியும் கேட்டார்.’ என பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவரான கிருஷ்ணபிள்ளை இராமச்சந்திரன் என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ். யோகசம்பந்தன் என்பவர் கடந்த வைகாசி மாதம் 25-ம் திகதி பருத்தித்துறை தும்பளைச் சேர்ந்த கி இராமச்சந்திரனை பயமுறுத்தி ரூபா 350 பெறுமதியான கைக்கடிகாரத்தை அபகரித்ததாகப் பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்டது

இராமச்சந்திரன் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சம்பவநாள் 3-ம் குறுக்குத் தெரு ரேட்டுக் கடையடியில் நின்றேன் கடைக்குப் பின்பக்கத்தால் வந்த எதிரி எனது சட்டைப் பொக்கற்றை தட்டிப் பார்த்து காசுதரும்படி கேட்டார். பிறகு மணிக்கூட்டை கொடுத்த நான் எதிரியிடம் காசைக் கொடுத்து மணிக்கூட்டை திரும்பப் பெறலாம் என்ற எண்ணத்தில் பொலிசாருக்கு அன்று புகார் செய்யவிரும்பவில்லை. பின்னர் 25-ம் திகதி எதிரியை பொலிசார் கைது செய்துள்ளதாக அறிந்தேன். பொலிசாருக்கு வாக்கு மூலம் கொடுத்தேன் பொலிசாருக்கு எனது மணிக்கூட்டை அடையாளம் காட்டினேன்.

மேல்விசாரணை அடுத்த மாதம் 8-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.


### அடைவு நகைகள் ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியின் வலிகிழக்கு (புத்தூர்) கிளையில் 1-3-1969 க்கு முன்பாக அடைவு வைத்து மீட்கப்படாமல் இருக்கும் நகைகள் யாவும் 8-7-70 புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம், யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியின் வலிகிழக்கு (புத்தூர்) கிளையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

முகாமையாளர்,
யா. கூ. மா. வங்கி,
வலிகிழக்கு (புத்தூர்)
2182


## ‘வெள்ளியை விடுமுறையாக்குக’

மாவிட்டபுரம், வெள்ளி

‘சைவமக்களின் புனித தினமான வெள்ளிக்கிழமையை சைவமக்களுக்கு விடுமுறை தினமாக்குக’ என்று அகில இலங்கை சைவ அனுட்டான சபைத் தலைவர் திரு. த. சிவலிங்கம் பிரதமர் ஸ்ரீமாவுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

அவ்வேண்டுகோளில் தெரிவித்திருப்பதாவது:-

கிறிஸ்தவ மக்களுக்கு ஞாயிற்றுக்கிழமை எவ்வளவு முக்கியமாக விளங்குகிறதோ அதேபோல சைவசமயத்தவருக்கும் வெள்ளிக்கிழமை ஒரு புனிதநாளாகும். இந்தப் புனிதநாளில் அவர்கள் சந்தோஷமாக வாழ அத்தினத்தை சகல சைவ அரசாங்க ஊழியர்களுக்கும் விடுமுறைத் தினமாக்குக’

## தமிழிலும் வெளிவரும்

வேலணை, வெள்ளி

இம்மாதம் 2-ம் திகதி வெளியான விசேஷ அரசாங்கவர்த்தமானியில் புதிய அமைச்சர்களின் பெயர்களும் அவர்களின் கீழுள்ள திணைக்களங்கள் பற்றிய விபரங்களும் விசேடமாக வெளியிடப்பட்டன.

இவ் அரசாங்கவர்த்தமானி சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் வெளிவந்திருப்பதாகவும் தமிழில் வெளிவரவில்லை என ஊர்காவற்றுறைத்தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அரசாங்க அச்சகத் தலைவருடன் தமிழில் தந்தி மூலம் தொடர்பு கொண்டதையடுத்து, தமிழில் வெளியிட நடவடிக்கை எடுப்பதாகவும் ஒருபிரதியை பண்டிதர் இரத்தினத்திற்கு அனுப்பி வைப்பதாகவும் அவ்வச்சகத் தலைவரிடமிருந்து பதில் தந்தி பண்டிதருக்குக்கிடைத்துள்ளதாகத்தெரியவருகிறது

தல்களில் போட்டியிடுவதற்கு கூட்டாட்சிக் கட்சிகளும் ஐக்கிய தேசியக்கட்சியும் தயாராகியிருக்கின்றன

வடபகுதியிலும் நடைபெறவிருக்கும் சில உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் கூட்டாட்சிக் கட்சிகள் [illegible]வது பற்றி ஆலோசனை செய்து வருகிறது. தமிழரசு தமிழ்க்காங்கிரஸ் கட்சிகளும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அபேட்சகர்களை நிறுத்துவது பற்றி ஆலோசனை செய்துவருவ[தாக] அறியப்படுகிறது

## ரூ. 150 லட்சம் ஜவுளியைச் சீனா இலங்கைக்கு வழங்கும்

கோட்டை, வெள்ளி

இலங்கைக்கு ஏறக்குறைய ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான ஜவுளியை வழங்குவதற்கு சீனா முன்வந்துள்ளது.

இந்த ஜவுளியை இலங்கை பணம் கொடுத்துப் பெறவில்லை. இதற்குப் பதிலாக றப்பரையும் தேங்காய் எண்ணையையுமே சீனாவுக்கு வழங்கவிருக்கிறது.

மேற்படி சீன ஜவுளி உடனடியாகக் கிடைக்கவிருக்கிறது. சீனாவை வி[ட] அரசாங்கம் போலந்து, செக்கோஸ்லவாக்கியா, ருமேனியா, பல்கேரியா, கிழக்கு ஜேர்மனி, ஹங்கேரி, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய நாடுகளிடமிருந்து ஜவுளிகளை இறக்குமதிசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது

### கல்வி அமைச்சர் கூறுகிறார்

## ‘சோஷலிஸக் கருத்துக்களை நாடகங்கள் பிரதிபலிக்க வேண்டும்’

வெள்ளவத்தை, வெள்ளி

“இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களாகிய முஸ்லிம்களும் தமிழர்களும் ஒன்று சேர்ந்து நடாத்துகின்ற ஒரு கலைநிகழ்ச்சியில் முதன்முதலாக நான் மந்திரி பதவியேற்றபின்னர் கலந்துகொள்வதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன், இன்றைக்குள்ள இதே ஒற்றுமையுடன் நாம் என்றும் வாழவேண்டும் என்பதே என் ஆசை இந்த நாட்டின் சகல பிரஜைகளும் சுதந்திரமாக வாழ்வதற்கு எமது அரசாங்கம் வழி வகுக்கும்”

இவ்வாறு கல்வி அமைச்சர் டாக்டர் அல் ஹாஜ்பதியுதீன் மொகமட் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற கவிஞர் அம்பியின் ‘வேதாளம் சொன்னகதை’ என்ற கவிதைநாடகத்தின் போது பிரதம அதிதியாகக் கலந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்வியமைச்சர் தொடர்ந்து கூறியதாவது: “இந்த நாட்டிலுள்ள சகலமக்களும் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழவேண்டும். தமிழ் மக்கள் எமது எதிரிகள் அல்லர் இந்த நாட்டில் சகல மக்களும் சமசந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுப் பொருளாதாரத்துறையில் முன்னேற்றமான சோஷலிச சமுதாயம் ஒன்றை அமைக்க வேண்டும் என்பதே என் ஆசை நாடகங்களும் இனிமேல் சோஷலிசக்கருத்துக்களையும் மக்களின் ஒற்றுமைக்கு அடிகோலும் கருத்துக்களையும் கொண்டனவாக அமைதல் வேண்டும்”

இலங்கைத் திரைப்படத் தமிழ்க்கலைஞர் சங்கக் காப்பாளரும் கம்யூனிஸ்ட்கட்சிப் பிரமுகருமான திரு. வ பொன்னம்பலமும் பேசினார்.

### சைவசபைகள்

## சுந்தரர் தலைமையில் பிரதமரை சந்திக்கும்!

மாவிட்டபுரம், வெள்ளி

ஆலய பிரவேசப் பிரச்னைக்கு தீர்வுகாண பிரதமரைச் சந்திக்க இருக்கின்றன சைவ சபைகள்.

அகில இலங்கை சைவ அனுட்டான பாதுகாப்பு சபை, அகில இலங்கை சைவாலயதர்மகர்த்தாக்கள் சபை, அகில இலங்கை வேதாகம சைவ சித்தாந்த சபை, சைவ உயர்பீடம் ஆகிய சைவ சபைகளே பிரதமரைப்பேட்டிகாண இருக்கின்றன.

சைவமக்களின் முக்கிய பிரச்னைகள் பற்றியும், அவற்றைத்தீர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது பற்றியும், சமய சுதந்திரத்தைக்காக்கவும், ஆலயபிரவேச பிரச்சினைக்குத் தீர்வுகாணவும், சைவாலய உற்சவங்களை ஒழுங்காக நடத்தவும் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்பது பற்றியும் மேற்படி பேட்டியின்போது பிரஸ்தாபிக்கப்படும்.

திரு. செ. சுந்தரலிங்கம் தலைமையில் செல்லும் மேற்படி சபைகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு பிரதமரைப்பேட்டிகாணும் சமயத்தில் கலாச்சார அமைச்சரையும் மேற்படி விஷயங்கள் குறித்துச் சந்திக்கலாம் என அறியப்படுகிறது.

இவ்வாறு தபாற்[தந்தி]ப் போக்குவரத்து அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர், கொழும்பு தலைமை அஞ்சலகத்தில் நடைபெற்ற ஆசிய உற்பத்தி வருடம் 1970 ஞாபகார்த்த[முத்]திரை வெளியீட்டு வைபவத்தின் போது பேசுகையில்கூறினார்.

கைத்தொழில் விஞ்ஞான கலாச்சார அமைச்சர் திரு. ரி பி. சுபசிங்கா, தபாற் கந்தோர்த் தலைமையதிபதி திரு. வேர்ணன் அபயசேகரா ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

### சந்திக்கும்

கொழும்பு, வெள்ளி

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தூதுக்குழுவொன்று பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்து தேர்தலுக்கு முன்னர் இவர்கள் வெளியிட்ட அறிக்கை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தவிருக்கிறது.

அந்த அறிக்கையில் பௌத்த-சிங்கள மக்கள் இழந்த உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும், பௌத்தம் தேசிய மதமாக வேண்டும், இலங்கையரல்லாதோருக்கு காணி வழங்க இடமளிக்கக்கூடாது இராணுவத்தில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். என்பன போன்ற பல கோரிக்கைகள் இடம்பெற்றிருந்தன

பௌத்தகாங்கிரஸ் தலைவர் டாக்டர் மலலசேகரா பிரதமரைச் சந்திப்பதற்கான திகதியைக் கேட்டு பிரதமருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

## தமிழ்க்காங்கிரஸ் எம். பி.க்கள் கட்சி மாறமாட்டார்களாம்

### வாலிபமுன்னணிக்கூட்டத்தில் வட்டுக்கோட்டை எம். பி.

யாழ்ப்பாணம், சனி

“தமிழ்க்காங்கிரஸ் ஆட்சி மன்றஉறுப்பினர்கள் எந்த சூழ்நிலையிலும் கட்சி மாறமாட்டார்கள். அரசாங்கத்தின் முற்போக்குக் கொள்கைக்கு ஆதரவளிக்கும் அதே நேரத்தில் தமிழ் பேசும் மக்களைப் பாதிக்கும் விஷயங்களை ஆட்சிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் முழு மூச்சாக எதிர்ப்பார்கள்.”

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணிக் கூட்டத்தில் வட்டுக்கோட்டை எம் பி. திரு. ஏ தியாகராசா பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

புறக்டர் ஏ. எஸ். நடராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நல்லூர் எம். பி. திரு. சி. அருளம்பலம் பேசும்போது, வாலிபர்களின் சக்தியினால் எதையும் சாதித்துவிட முடியுமென்றும் வருங்காலம் வாலிபர் கையில் தங்கியிருக்கிறதென்றும் கூறினார்.

திரு. ஜிம்மி ராஜரத்தினம் பேசும்போது 65-ம் ஆண்டு தேர்தலில் வாலிபர்களுக்கு இருந்த உற்சாகம் கடந்த தேர்தலில் காணப்படவில்லையென்றும் வாலிபர் தொடர்ந்து பாடுபடவேண்டும் என்றும் கூறினார்.

### தோல்விக்கு காரணம்

ஜனாப் எம். நூர்முகமது பேசும்போது தலைமைக் காரியாலய நிர்வாகக் குறைவினால்தான் கட்சிக்கு சில தொகுதிகளில் தோல்வி ஏற்பட்டதென்றும், நிர்வாகம் முற்றிலும் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்றும், கடந்த தேர்தலில் வடமாகாணத்தில் சுமார் 35,000 மக்களின் ஆதரவு கூடியிருப்பதாகவும், ஒவ்வொரு தொகுதியிலும் காங்கிரஸ் வளர்ச்சியடைந்திருப்பதாகவும் கூறினார்.

தமிழ்க்காங்கிரஸ் மக்களுடன் நெருங்கிய தொடர்புள்ள கட்சியாக மாறவேண்டுமென்றும் நிர்வாகம் வாலிபமுன்னணியிடம் மாறவேண்டுமென்றும் இக்கூட்டத்தில் பலர் வலியுறுத்தினார்கள்.

தலைமைக் காரியாலய பொறுப்பாளர்பதவி ஒரு வாலிபரிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் பலத்த கரகோஷத்திற்கிடையே ஏகமனதாக நிறைவேறியது. தற்போதயகாரியாலய பொறுப்பாளர் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை சிலரின் ஆலோசனையின்படி வாபஸ் பெறப்பட்டது.

புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும் கிளைகளை நிறுவுவதற்கும் ஐவர் கொண்ட கமிட்டி ஒன்று நிறுவப்பட்டது. ஒவ்வொரு போயா தினமும் வாலிப முன்னணி கூட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் தமிழ்க்காங்கிரஸ் எம். பிக்களுக்கு வரவேற்பளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

திருமதி ஜி. ஜி. பொன்னம்பலம் பேசும்போது கடந்த தேர்தலில் உற்சாகத்துடன் உழைத்த வாலிப முன்னணியினர் தொடர்ந்தும் கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபட வேண்டுமென்றும் கூறினார்.

## பிரதமர் இந்திரா மீது கல்வீச்சு

கல்கத்தா, ஜூன் 19

கூட்டமொன்றில் பேசிக்கொண்டிருந்த பிரதமர் இந்திராகாந்தி மீது கற்களை வீசி இந்திராவை தொடர்ந்து பேசவேண்டாம் என்று கோஷித்தனர். ஆனால் அவர் கல்வீச்சையும் பொருட்படுத்தாது தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். மேற்கு வங்காளத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நேற்றுஇச்சம்பவம்நிகழ்ந்தது.

“கல்வீச்சையோ, வன்சொற்களையோ கண்டு நான் அஞ்சப்போவதில்லை, வன்முறை மூலம் புரட்சி ஒன்றை ஏற்படுத்த சிலர் முயலுகிறார்கள். அதற்கு நான் அடிபணியமாட்டேன்” என்று திருமதி இந்திரா பேசுகையில் கூறினார்.

னையை சோயுஸ்-9 முறியடித்துள்ளது.

உலகை வலம்வந்த வீரர்கள் நிக்கலேயா, செபஸ்டியானோ ஆகிய இருவரும் தேகாரோக்கியத்துடன் பூமிக்குத் திரும்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

## பதில் அட்டோர்னி ஜெனரல் காலமானார்

கோட்டை, வெள்ளி

பதில் அட்டோர்னி ஜெனரல் திரு எல். பி. ஜி. பிரேமரத்தின கியூ. சி. இன்று காலமானார் 1949-ம் ஆண்டில் முடிக்குரிய வழக்கறிஞராக நியமனம் பெற்றஇவர் பண்டாரநாயக்கா கொலை வழக்கில் பிரதம அரசாங்க துறை வழக்கறிஞராகப் பணி புரிந்தவர்.

சிங்களத்தில் வழக்கை விசாரணை செய்த முதலாவது வழக்கறிஞரென்ற பெருமையையும் இவர் பண்டாரநாயக்கா கொலைவழக்கின்போது பெற்றுக்கொண்டவர். இவருக்கு தற்போது வயது 49.

### தேநீர்க்கடைப் பிரவேசம்

யாழ்ப்பாணம், சனி

இணுவில் கந்தசுவாமி கோவில் வாசல் தேநீர்க்கடைப் பிரவேசம் சிறுபான்மைத்தமிழர் மகாசபை உபதலைவர் திரு சி. க துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது. எதுவித தடங்கலுமின்றி அனுசரணையாக தேநீர்க்கடைப் பிரவேசம் மிகவும் அமைதியாக நடைபெற உதவியதற்கு தலைவர் நன்றி தெரிவித்தார்.

### இன்று

இணுவில், சனி

இணுவில் அம்பலவாண கந்தசுவாமி கோவில் மஞ்ச உற்சவம் இன்று நடைபெறுகிறது. பகல் 12 மணிக்கு சங்காபிஷேகம் நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


### தேவை

கணக்கியலில் அனுபவம் பெற்ற ஒரு மனேஜர் தற்காலிகமாகத் தேவை. தராதரம் எஸ். எஸ். ஸி. ஆங்கிலப்பாடச்சித்தியுடன் கூட்டுறவு பயிற்சிபெற்றிருத்தல் வேண்டும். 30 வயதுக்குக் கூடியவராக இருத்தல் வேண்டும். பிணை: ரொக்கம் 1000 ரூபா, ஆதனம் 5000 ரூபா. ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. விண்ணப்பங்களை பரந்தன்ப. நோ கூ. சங்கம்லிமிட்டெட் பரந்தன் என்ற விலாசத்துக்கு 30—6—70-க்கு முன் பெற விரும்பும் சம்பளத்தைக் குறிப்பிட்டு அனுப்பி வைக்க வேண்டும். தலைவர், பரந்தன் ப. நோ. கூ. ச லிமிட் 2315

ஸ்ரூடியோவில் கடமையாற்றுவதற்கு சகல வேலைகளிலும் அனுபவம் வாய்ந்த ஒரு உதவியாளர் தேவை. 30-6-70-க்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 2157, மே/பா 'ஈழநாடு'. த. பெ. இல. 49, யாழ்ப்பாணம். 2157

### விற்பனைக்கு

சைக்கிள்!

நடக்க முடியாதவர்கள் பாவிக்கக்கூடிய மூன்றுசில்லுகளுடைய புதிய (HERO) சைக்கிள் விற்பனைக்குண்டு. திருமதி சிவஞானசுந்தரம். 10/4, அருளம்பலம் ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம். 3101

### விற்பனைக்கு

வீடு

நல்லூர் கோயில் வீதியில் மூன்று பரப்பும் ஆறு குளி காணியில்உள்ள புதிய வீடு விற்பனைக்குண்டு. வாங்குவோர் உடனே குடியேறலாம். தொடர்புகொள்க: லான்ட் இன்வெஸ்றமென்ற் 6 பெரியதெரு, யாழ்ப்பாணம் (வாடிவீட்டுக்கருகாமையில்) 3102

வேலணைகிழக்கு அரசினர் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் மண்கும்பான்-வேலணை பஸ் போக்குவரத்து வீதியிலுள்ள 188 பனைகளுள்ள 22 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நேரில் விசாரிக்கலாம். சாயிறைக்கிளீனேஸ், வெலிங்டன் தியேட்டர் சந்தி, யாழ்ப்பாணம் தொலைபேசித்தொடர்பு474 3103

### உற்சவம்

கோப்பாய், வெள்ளி

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர் வரும் ஜூலை 1-ம் தேதி கோலாகலமான முறையில் நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன.

**MANOHARA**
**JAFFNA**
Daily 4-45, 7&9-45 p.m.
Poya-Pre.Poya 10.30 a.m
Clint Walker
Akim Tamiroff
in
THE GREAT BANK ROBBERY
(Technicolor)
(இதற்கு முன் வெளிவராத புதிய படம்)

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
[போயா, பிரிபோயா 2-30]
நாகேஷ் - ராஜ்ஸ்ரீ
நடித்த
**அனுபவிராஜா அனுபவி**

**REGAL** JAFFNA
Daily 4 Shows
Jim Brown
Raquel Welch
in
100 RIFLES
(Adults only)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
பிரி-போயா, போயா 4 காட்சிகள்
ஜெமினி — சாவித்திரி
நடித்த
**மனிதன் மாறவில்லை**

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
**பறக்கும்பாவை**
[ஈஸ்ட்மன் கலர்]

**ராணி** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்—கே. ஆர். விஜயா
நாகேஷ்—வி கே. ராமசாமி
நடித்த


## வெற்றி தோல்வி இல்லை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண பாடசாலை ஹாக்கி விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில், பாடசாலைகளிடையே நடைபெற்று வரும் ஹாக்கிச் சுற்றுப் போட்டியில் கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயத்துக்கும், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டி எவருக்கும் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது

'ஏ' பிரிவிலும், 'பி' பிரிவிலும் இரு கல்லூரிகளும் தலா 1 — 1 கோலைப் பெற்றிருந்தன.

'ஏ' பிரிவு ஆட்டத்துக்கு திரு. மகேந்திரனும், திரு. நடேசும், 'பி' பிரிவுக்கு திரு ஆனந்தரட்ணமும், திரு. மகேந்திரனும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள். (தே நி)

— —

## 'விவேகிக்கு விளையாட்டு அவசியம்'

முசலி, வெள்ளி

''மனிதனுக்கு உணவும் உடையும் எவ்வளவு முக்கியமோ அதைப்போலவே மனிதன் திடகாத்திரமாகவும் நல்ல விவேகியாகவும் இருப்பதற்கு விளையாட்டு மிகவும் அவசியமாகும். மனிதனுக்கு உடலுறுதி திடகாத்திரமாக இருந்தால்தான் அவன் உள உறுதிகொண்டு வாழ்வான் இதற்காகவே ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும்விளையாட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.''

மன்னார் காரியாதிகாரி பிரிவில் விளையாட்டு உத்தியோகஸ்தராகக் கடமையாற்றி புத்தளத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள திரு. ஏ. ரி. டி. சின்னத்தம்பிக்கு மன்னார்ப் பகுதி விளையாட்டுக் கழகங்கள் அளித்த பிரிவுபசாரத்தில் உரையாற்றிய மன்னார் காரியாதிகாரி திரு. கே. தயாபரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில், திரு. சின்னத்தம்பி எமது பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களின் வளர்ச்சிக்காகப் பெரிதும் உழைத்தார் எனக் குறிப்பிட்டார்.

— —

## கடற்றொழில் கூட்டுத்தாபன அதிபர்கள் சபை

கோட்டை, வெள்ளி

கடல்தொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்ஷ

# 'ஈழத்து எழுத்தாளர் நூல்களை அரசாங்கம் வாங்க வேண்டும்'

## அமைச்சரை கோருவதென கலை இலக்கிய பெருமன்றம் தீர்மானம்

யாழ்ப்பாணம், சனி

ஈழத்து எழுத்தாளர்களின் தரமான இலக்கியநூல்களில் 500பிரதிகளையாவது. அரசாங்கம் வாங்கி அவர்களது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டும்.

நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணத்தில் டாக்டர் வாமதேவா தலைமையில் நடந்த கலை இலக்கியப் பெருமன்றத்தின் ஆலோசனைக் கூட்டத்தில், கூட்டரசாங்கத்தின் கலாச்சார அமைச்சர் திரு.குலத்திலக்காவிடம் மேற்கண்ட கோரிக்கையைச் சமர்ப்பிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

அமைச்சரைகலைஇலக்கியப் பெரு மன்றத்தின் சார்பாக சந்தித்து பேட்டிகண்டு, ஈழத்து கலை இலக்கியத்துறையில் ஈடுபட்டிருப்போருடைய பிரச்னைகளை தெரிவிப்பது சம்பந்தமாக இந்த ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

மக்களாட்சியை நிறுவியுள்ள பிரதமர் திரு திஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு மனப்பூர்வமான பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதென்றும், புதிய நியமன எம்.பி திரு எம் ஸி. சுப்பிரமணியத்துக்கும் பாராட்டுத் தெரிவிப்பதென்றும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன

அமைச்சரை பேட்டி கண்டு தெரிவிப்பதென தீர்மானிக்கப்பட்ட சில விஷயங்கள் வருமாறு:

0 ஈழத்து கலை இலக்கியத் துறைகளில் நீண்ட காலப் பங்கு ஆற்றி வருபவர்களுக்கு அரச விருதுகள் வழங்கப்பட வேண்டும்.

0 பிலிம் கமிஷன் அறிக்கையைச் செயல் படுத்த வேண்டும்.

0 இதுவரை காலமும் வானொலியில் ஒதுக்கப்பட்டு வந்த முற்போக்கு கலைஞர்களுக்கு இடமளிக்க ஆவன செய்ய வேண்டும். யாழ்ப்பாணத்தில் உப வானொலி நிலையம் நிறுவ வேண்டும்.

0 கலைக்கழகம், சாகித்திய மண்டலம் போன்றவற்றில் கலை இலக்கியத் தொடர்புள்ளவர் நியமிக்கப்பட வேண்டும். மன்றத்தின் செயலாளரும், மல்லிகைஆசிரியரும் எழுத்தாளருமான திரு. டொமினிக்ஜீவா பேசுகையில்'இந்தநாட்டிலுள்ள கலைஞர் எழுத்தாளர் கௌரவிக்கப்பட வேண்டும். இதற்காகவே நாம் பல்லாண்டு காலமாக போராடி வருகிறோம்: இன்று வெற்றிபெறும் கட்டத்தை அடைந்து விட்டோம். உண்மையான மக்களாட்சி நிறுவப்பட்டு விட்டது நாம் அயராது உழைக்க வேண்டும் என்றார்'.

திரைப்பட நடிகர் திரு. ஏ. ரகுநாதன் பேசுகையில் தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் தரங்கெட்ட தமிழ் படங்கள் எல்லாம் நடை செய்யப்பட வேண்டும். இந் நாட்டில் தயாரான சிங்கள. தமிழ்ப் படங்கள் நமது தியேட்டர்கள் முழுவதிலும் ஓட வேண்டும்' என்றார்

கலைஞர், எழுத்தாளர்களை எதிர் நோக்கும் பல விஷயங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதுடன், திடீர் திடீரெனத் தோன்றும் போலிக்கலைஞர்கள் குறித்து எச்சரிக்கப்பட்டது. (கு வி ம)

## ''சாகித்திய மண்டலத்துக்கு கலை, இலக்கிய துறையினரை தெரிவு செய்யவேண்டும்''

யாழ்ப்பாணம். சனி

திரு. எஸ். எஸ். குலத்திலகா கலாச்சார அமைச்சராகப் பதவியேற்றுள்ளதை யாழ். இலக்கிய வட்டம் பாராட்டியிருப்பதுடன் கீழ்க்கண்ட கோரிக்கைகளையும் அவருக்குச் சமர்ப்பித்துள்ளது.

எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலம், கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களுக்கு உறுப்பினர்களைத்தெரிவுசெய்யும்போது எழுத்தாளர் சங்கங்கள், நாடக மன்றங்கள் ஆகியனவற்றைக் கலந்தாலோசித்து உண்மையாகக் கலை, இலக்கியத் துறைகளின் வளர்ச்சியில் ஈடுபாடுள்ளவர்களைத் தெரிவுசெய்ய முன்வரவேண்டும்

0 சன சமூக நிலையங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள இலவச தபாற்சேவை போன்று எழுத்தாளர் சங்கங்கள். நாடக மன்றங்கள் ஆகிய வற்றிற்கும் இலவச தபாற் சேவைச் சலுகை அளிக்கப்படவேண்டுமென வேண்டுகின்றோம்.

0 கலை, கலாச்சார வளர்ச்சிக்காகச் செயல்படும் எழுத்தாளர் சங்கங்கள், நாடக மன்றங்கள் ஆகியவற்றிற்கு, ஆண்டுதோறும் சன சமூக நிலையங்களுக்கு அரசாங்கம் நன்கொடை வழங்கிவருவது போல, கலாச்சார அமைச்சு நன்கொடை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுகின்றோம்.

0 இஃது பற்றித் தங்களுடன் எமது செயற்குழு, பேட்டிகண்டு கலந்துரையாட வசதியான திகதியை அறிவிக்கும்படியும் கோரியுள்ளது. (கு. வி. ம.)

## சிவப்புக்கு முதலிடம்

சுழிபுரம், வெள்ளி

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்தவிளையாட்டுப்போட்டியில் சிவப்பு இல்லம் 146 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தையும், நீல இல்லம் 129 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும், மஞ்சள் இல்லம் 121புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தையும் பெற்றன.

## வருடாந்த


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# 'விக்கிரகத்தைதொட்டுவணங்க அருகதையற்றவர்கள்'

யாழ்ப்பாணம், திங்கள்

''ஆலயங்கள் பரிசுத்தமானவை. அங்கு தீயசெயல்கள் புரிவோரை நரகம் ஒரு பொழுதும்விடாது. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை என்றும் ஏற்றிப்போற்றி வாழவேண்டும் இறைவன் எல்லா உயிர்கள் மீதும் அன்பாகவே இருக்கின்றார். அந்தணர்களைத் தவிர நாம் எல்லோரும் சரியையாளர்கள். பலிபீடத்திற்கு அப்பாற் செல்லவோ விக்கிரகத்தை தொட்டு வணங்கவோ அருகதையற்றவர்கள். அந்தணர்கள் வழிகாட்ட அவர்களின் கிரியாவழிமார்க்கத்தில் நின்று நாமும் வீட்டின்பம் அடைய முற்படவேண்டும்''

இலங்கை இந்துசமய பரிபாலன பிரசாரசபைத் தலைவர் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நிகழ்ந்த சமய ஆண்டுவிழாவில் பேசுகையில் கூறினார்.

சமயத்திற்கு உழைக்க வேண்டியது சபையினரின் தலையாய கடமையென்றும் ஆவணி 9-ம், 10-ம், 11-ம் திகதிகளில் சைவப்பெருவிழாவைச் சபை விமரிசையாகச் சமயஊர்வலங்களும் கொண்டாடவிருப்பதாகவும் அதில் சிறப்புப் பேச்சாளராக திருமுருக கிருபானந்தவாரியாரை அழைப்பதற்குவேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் சபைத்தலைவர் நடத்திவரும் சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் ஆகிய இலவச பயிற்சி வகுப்புக்களில் அனைவரையும் பங்குபற்றுமாறும் எல்லா சமய ஸ்தாபனங்களும் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இவ் வருடம் ஆலயங்களில் அசம்பாவிதங்கள் நிகழாமல் அனைவரும் கடவுளை வணங்கி வீட்டின்பம் அடைதற்கு வேண்டிய வழிமுறைகளில் இயங்குவதற்கும் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்கும் பண்டிதர் இரா சிவசுப்பிரமணியம் தலைமையில் ஐவர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது.

— —

## ஆயுள்வேத வைத்தியசாலை
## 2 வருடங்களில் பூர்த்தியாகும்

கைதடி, வெள்ளி

கைதடி நவீன ஆயுள்வேத வைத்தியசாலையினதும் கல்லூரியினதும் கட்டிடவேலைகள் மிகத் துரிதமாக நடைபெறுகின்றன. இதற்காக தேசிய அரசாங்கம் 3,000,000 ரூபா ஒதுக்கியிருந்தது.

சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினத்தின் முயற்சியால் தேர்தலுக்கு முன்பு தொடக்கம் கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இக்கட்டிடம் பூர்த்தியாவதற்கு 2 வருடங்கள்வரை செல்லலாமென கட்டிடப் பகுதி என்ஜினியர் தெரிவித்துள்ளனர்.

அரசாங்க வேலைப்பகுதியிலிருந்து பிரிந்த கட்டிடப் பகுதியினரே இந்த வேலையைப் பொறுப்பேற்று செய்கின்றனர்.

முதல் முதல் தாங்கள் பொறுப்பேற்று நடாத்தும் இக்கட்டிடம் மிகநல்ல முறையில் அமையுமெனவும் இதன் மேல் இப்படிப்பட்ட அரசாங்கவேலைகள் யாவற்றையும் தங்களின் கட்டிடப்பகுதியே பொறுப்பேற்று நடாத்துமெனவும் மேற்படி என்ஜினியர் தெரிவித்தார்.

கட்டிடப்பகுதி ஆணையாளரும் கட்டிடவேலைகளை நேரில் சென்று பார்வையிட்டு மிகவிரைவில் வீடமைப்பு கட்டிடப்பகுதி அமைச்சர் திரு. பீற்றர் கெனமன் இங்கு விஜயம் செய்யவிருக்கும் தகவலை தெரிவித்தார்.

மேற்படி கட்டிடவேலைகள் துரிதமாக நடைபெறத் தற்காலிகமாக மின்வசதியளிக்கப்பட்டுள்ளது.

## கஞ்சாச்செடி

மட்டுவில் வியாழன்

மந்துவில் தாவளை இயற்றாலை என்ற கிராமத்திலுள்ள ஒரு தோட்டத்தில் கஞ்சாச்செடி இருப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் என். கதிர்காமநாதன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி அச்செடிகளைக் கைப்பற்றியது. இது சம்பந்தமாக யாரும் கைது செய்யப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ஈஸ்ட்மன் கலர்]

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர்—கே. ஆர். விஜயா
நாகேஷ்—வி கே. ராமசாமி
நடித்த

## பெண்ணை வாழ விடுங்கள்



ரசிகப் பெருமக்கள் குடும்பத்துடன் சென்றுபார்க்க வேண்டிய ஒரு தமிழ்த்திரை விருந்து.

யாழ். வின்ஸர் வெண் திரையில்

இப்பொழுது திரையிடப்படுகிறது

ஜெய்சங்கர்—தேவிகா

நாகேஷ், சச்சு, மனோகர்
நடித்த

## தெய்வீக உறவு

(தினசரி 4 காட்சிகள்)




இப்பொழுது திரையிடப்படுகிறது

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)

எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
நாகேஷ் ரெங்கராவ்
மற்றும்பலர் நடிந்த





## கூட்டுறவு கடற்றொழில் கூட்டுத்தாபன அதிபர்கள் சபை

கோட்டை, வெள்ளி

கடல்தொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்ஷ கடல்தொழில் கூட்டுத்தாபான அதிபர்கள் குழுவொன்றை நியமித்துள்ளார். அக்குழுவின் தலைவராக திரு. ஏ. ஜி. குணவர்தனவும் பொது முகாமையாளராக ஐவன் சில்வாவும் நியமிக்கப்பட்டனர். இக்குழுவின் மற்றைய அங்கத்தவர்கள் திரு. எம். சந்திரசேன. திரு. விக்கிரமசூரியா ஆவர்.

...சல இல்லம் 121 புள்ளிகளைப் பெற்று மூன்றுவது இடத்தையும் பெற்றன.

## வருடாந்த பொங்கல் விழா

வல்வெட்டித்துறை, வெள்ளி

தொண்டமாறு செல்வச்சந்நிதி கோவில் வருடாந்தப் பொங்கல் விழா இம்மாதம் 22-ந் திகதி இரவு நடைபெறவிருக்கிறது. இதற்கான தண்ணீர் எடுத்தல் விழா கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்றது

...சேவை ...றன்று எழுத்தாளர் சங்கங்கள். நாடக மன்றங்கள் ஆகியவற்றிற்கும் இலவச தபாற்...

விளம்பரம் செய்க

மேற்படி கட்டிடவேலைகள் துரிதமாக நடைபெறத் தற்காலிகமாக மின்வசதியளிக்கப்பட்டுள்ளது.

...கோஷ்டி அச்செடிகளைக் கைப்பற்றியது. இது சம்பந்தமாக யாரும் கைது செய்யப்படவில்லை.

# திருடர்கள் தொல்லை!

மாவிட்டபுரம், வெள்ளி

நீர்இறைக்கும் இயந்திரங்களின் உதிரிப்பாகங்கள் களவாடப்படுவதால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

வசாவிளானை அடுத்த ஒட்டகப்புலத்திலும், அதனை அடுத்த பகுதிகளிலும் காலபோகத்தில் நாட்டப்பட்ட வெங்காயம், மிளகாய் உட்பட மற்றும் உப உணவு பயிர்களுக்கு நீர் இறைக்க தோட்டங்களில் பூட்டப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரங்களின் உதிரிப்பாகங்களை களவாடுவதில் ஒரு கோஷ்டி ஈடுபட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் புகார் கூறுகின்றனர்,

இவ்வியந்திரத்திலுள்ள "மைக்கனட்" என்ற பொருளே இதுவரை காலமும் களவாடப்பட்டு வந்ததாகவும், விவசாயிகள் அதை இயந்திரத்திலிருந்து கழற்றி வீடு கொண்டு சென்றுவிடுவதால் தற்போது மற்றும் உதிரிபாகங்கள் களவாடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒட்டகப்புலத்தைச் சேர்ந்த சூசைப்பிள்ளை செல்வப்பாவின் இயந்திரத்திலிருந்து மண்ணெண்ணை, பெற்றோல் டாங்கி, அதனுடன் இணைக்கப்பட்டகுழாய்கள் என்பவற்றை திருடர்கோஷ்டி களவாடியுள்ளதாம்.

இதுபற்றி இவர் அச்சுவேலி பொலிசில் புகார் செய்ததையடுத்து பொலிசார் மேற்படி திருடர் கோஷ்டியை அகப்படுத்த வலைவீசியுள்ளனர்.

ஏராளமான செலவில் பயிர்களை நாட்டியும் திருடர்களின் அக்கிரமத்தால் அவற்றுக்கு நீர் பாய்ச்ச முடியாது இருப்பதால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# 'முன்னேக்கிப்பாயும்நதியை தடுத்து நிறுத்த முடியாது'

பருத்தித்துறை, வெள்ளி

"முன்நோக்கிப் பாயும் நதியைத் தடுத்துப் பின்னேறச்செய்ய முடியாதென்னும் வரலாறு கண்ட உண்மைக்கு எமது நாட்டு மக்கள் இயக்கம் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. 1956ம் ஆண்டு எழுச்சியுள்ள மக்கள் இயக்கத்தின் வேகத்தை இடையிடையே முதலாளித்துவ, பிற்போக்குச் சக்திகள் அணைகட்டித் தடுத்து நிறுத்தமுயன்றும் தோல்வியடைந்தன. இனிமேல் அதன் உத்வேகத்தை எவரும் தடுத்துநிறுத்த முடியாது"

இவ்வாறு நேற்று முன்தினம் துன்னாலையில் நடைபெற்ற முற்போக்கு இளைஞர் மன்றத்தில் உரை நிகழ்த்திய நியாயவாதி திரு. எஸ் ஜெயசிங்கம் கூறினார்.

திரு கே. எஸ். சிதம்பரநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. ஜெயசிங்கம், தமிழ்மக்கள் தென்னிலங்கை முற்போக்குச் சக்திகளுடன் இணைந்து இயங்குவதன் மூலம் தங்கள் மொழியுரிமைகளையும், சமூக உரிமைகளையும் வென்றெடுக்க முடியுமென்றும், பழைய வகுப்புவாதப் பாதையை விட்டு, புதிய சோஷலிசப் பாதையில் ஏறுநடைபோட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.


## பொஸ்றின்

புகையிலையும் காய்கறியும் பயிராடும் கமக்காரரே!




இன்று பெறக்கூடிய சக்திமிகு உடன் செயலாற்றும் கிருமிநாசினி காய்கறி, புகையிலை ஆகியவற்றைத் தாக்கும் பீடைகளை ஒழிக்க வல்லது.

**வங்கெம் இலங்கை லிமிட்டெட்**

சிலிங்கோ கட்டிடம் த. பெ. 919 கொழும்பு.

டெலிபோன்: 28333

இரசாயனங்களை நினையுங்கள். வங்கெம்மை நினையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் தேர்தல்: கன்சர்வேடிவ் கட்சிக்கு வெற்றிநிச்சயம்

பிரிட்டிஷ் பொதுத்தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி அமோக வெற்றிபெறும் என்பது உறுதியாகிவிட்டது. தொழிற்கட்சியின் பல தொகுதிகளை கன்சர்வேடிவ் கட்சி கைப்பற்றியுள்ளது. தமது கட்சி ஆட்சிக்குவரும் என்பதில் கன்சர்வேடிவ் தலைவர் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கிறார்

## தொழிற்கட்சிக்கு எதிர்பாராத அளவு சரிவுகள்

லண்டன், ஜூன் 19

பிரிட்டனில் கன்சர்வேடிவ் கட்சியினர் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான பெரும்பான்மை பலத்தைப் பெறுவார்கள் என்று இப்பொழுது உறுதியாகிவிட்டது.

இன்று பிற்பகல்வரையில் வெளியான தேர்தல் முடிவுகளில் தொழிற்கட்சி முன்னணி வகித்துவந்தபோதிலும் வழமையாக அக்கட்சி பெரும்பான்மை வகித்துவரும் பகுதிகளில் ஏராளமான தொகுதிகளைக் கோட்டைவிட்டுள்ளது.

### பழைய மந்திரி தோல்வியுற்றார்

தொழிற்கட்சியின் முன்னாள் வெளிநாட்டு அமைச்சரும், தொழிற்கட்சியின் துணைத் தலைவருமான ஜோர்ஜ் பிரௌன் படுதோல்வியுற்றிருக்கிறார். இவர் கடந்த 25 ஆண்டுகளாகப் பிரதிநிதித்துவம் வகித்துவந்த தொகுதியில் எதிர்க்கட்சி வேட்பாளர் இரண்டாயிரம் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார். இவரது தோல்வி தொழிற்கட்சிக்குப் பெரும் நஷ்டமென்று கருதப்படுகின்றது.

### பிரதமர் வில்சன்

பிரதமமந்திரியும் தொழிற்கட்சித் தலைவருமான திரு ஹரேல்ட் வில்சன் தமது எம். பி. பதவியைத் தப்பவைத்துக் கொண்டுள்ளார். சுமார் ஆயிரம் வாக்குகள் அவருக்கு அதிகப்படியாகக் கிடைத்திருக்கிறது.

### ஹீத் அமோக வெற்றி

கன்சர்வேடிவ் கட்சித்தலைவர் திரு. ஹீத், அமோக வெற்றிபெற்றிருக்கிறார் அவருக்கு கடந்த தேர்தலில் கிடைத்ததைவிட மும்மடங்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைத்துள்ளன. நாளைய தினம் அவர் பிரதம மந்திரியாகப் பதவி ஏற்கக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது லிபரல் கட்சித் தலைவர் தமது எம். பி. பதவியைத் தப்பவைத்துக்கொண்டபோதிலும் பெரும்பான்மை வெகுவாகக் குறைந்துவிட்டது. இதுவரை வெளியான முடிவுகளின்படி கம்யூனிஸ்டுகள் பெரும் தோல்வியடைந்திருக்கிறார்கள்.

தேர்தல் முடிவுகள் பற்றிய விபரங்களைக் கணித்து ஆருடம் கூறும் கம்பியூட்டர் கருவியும் கன்சர்வேடிவ் கட்சியே பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றிபெறும் என்று தெரிவித்துள்ளது. கன்சர்வேடிவ் கட்சிக்கு ஆட்சியை கொண்டுசெலுத்துவதற்குப் போதுமான பெரும்பான்மை கிடைக்கும் என்று பார்வையாளர்கள் கூறுகிறார்கள். கன்சர்வேடிவ் கட்சிக்கு 20ல் இருந்து 35வரையில்பெரும்பான்மை கிடைக்கலாமென்று கம்பியூட்டர் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

தொழிற்கட்சிக்கு வழமையாகப் பெரும்பான்மை இருந்துவரும் கைத்தொழிற் பகுதிகளில் அக்கட்சிக்குப் பெரும் சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இப்பகுதியில் கன்சர்வேடிவ் கட்சி பல இடங்களைத் தொழிற்கட்சியிடமிருந்து கைப்பற்றியுள்ளது. இந்த முடிவுகளைக் கொண்டு பார்க்கையில், பொதுவாக கன்சர்வேடிவ் கட்சிக்குப் பெரும்பான்மை இருந்துவரும் கிராமப் பகுதிகளில் அக்கட்சி அமோக வெற்றி பெறலாமென்று கருதப்படுகிறது கைத்தொழிற்பகுதிகளின் தேர்தல் முடிவுகளே முதலில் அறிவிக்கப்பட்டன கிராமப் பகுதிகளின் முடிவுகள் இன்று மாலைவாக்கில் அறிவிக்கப்படும்.

### அபிப்பிராய கணிப்பு பொய்யாகிவிட்டது

நேற்று பொதுத் தேர்தல் ஆரம்பமாவதற்குச் சற்று நேரம்வரை வெளியான அபிப்பிராயக் கணிப்புகளில் தொழிற்கட்சியே பதவிக்கு

### சர்ச்சைக்குரிய வேட்பாளர் வெற்றி

---

கம்போடியா

## நாம்பென் - சைகோன் பாதை துண்டிப்பு

### தலைநகருக்கு 10 மைல் அருகில் வியட்காங்கியர்

நாம்பென், ஜூன். 19

கம்போடியாவின் தலைநகரான நாம்பென்னுக்குசுமார் 10 மைல் வியட்காங்துருப்புகள்அரசாங்கத்துருப்புகளை எதிர்த்துப் போராடிக்கொண்டிருப்பதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

பல கம்போடிய நகரங்களில் கம்யூனிஸ்ட்களின் வலுத் தாக்குதல்களை அரசாங்கப்படைகள் சமாளித்துவருவதாகக் கூறப்படுகின்றது.

இதற்கிடையில் நாம்பென்னுக்கும் சைகோனுக்குமிடையில் உள்ள பிரதான நெடுஞ்சலையைக் கம்யூனிஸ்ட்கள் துண்டித்விட்டிருக்கிறார்கள். சியாம்ரியாத் நகர்மீது கம்யூனிஸ்ட்கள் மீண்டும் கடும் தாக்குதல்களை முடுக்கியிருக்கிறார்கள்

#### யு. எஸ். மறுப்பு

லாவோசுக்குள் அமெரிக்கா துருப்புகளை அனுப்பியிருப்பதாக வடவியட்னும் தெரிவித்திருந்த குற்றச்சாட்டுக்களை அமெரிக்க அதிகாரி ஒருவர் மறுத்திருக்கிறார்.

பாரிஸில் நடைபெறும் வியட்னும் அமைதிப் பேச்சுக்களின் போது வடவியட்னும் பிரதிநிதிகள் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்தனர்.

### ஜனதிபதியின் தூது

ஹெல்ஸிசிங், ஜூன் 19

பம்பாயிலுள்ள ஓர் இந்திய இளைஞன் பின்லாந்திலுள்ள தனது பேனு தோழிக்குப் பரிசளிக்க விரும்பினன். ஆனல் தபால் மூலம் அனுப்ப அதிக கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. எனவே பின்லாந்து பயணமாகும் இந்திய ஜனதிபதி திரு. கிரிக்கு இதுபற்றி எழுதி தனது சார்பில் பரிசைத் தனது தோழிக்குக் கொண்டு செல்ல முடியுமா என்று கேட்டிருந்தான். ஜனதிபதி கிரி அதற்கு ஒப்புக்கொண்டு பரிசுப்பொருள்களைப் பெற்று பின்லாந்தின் தலைநகரான ஹெல்சிங்குக்கு வந்ததும் உரியவரிடம் அதை அவர் ஒப்படைத்தார்

---

புதுக்குடியிருப்பு, வெள்ளி

நியமன எம். பி. திரு. எம்ஸி சுப்பிரமணியத்திற்கு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சிறுபான்மைத் தமிழ் மக்கள் வரவேற்பு அளிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளனர்.

---

## தொலைபேசியில் நடந்த திருமணம்

லண்டன், ஜூன், 19

இங்கிலாந்திலுள்ள 49 வயது முஸ்லிம் நபருக்கும் கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள பெண் ஒருவருக்கும் அண்மையில் தொலைபேசி மூலம் திருமணம் நடைபெற்றுள்ளது இங்கிலாந்துயார்க் நகரிலுள்ள இஷ்ரத் அலி என்னும் அந்த நபர் மணப் பெண்ணை நேருக்கு நேர் பார்த்ததில்லை. அவரது புகைப் படங்களைத்தான் பார்த்திருக்கிறார். திருமணம் தொலைபேசியில் 5 நிமிடம் நடைபெற்றது. விரைவில் மணமகனைச் சேர்வதற்கு மணமகள் லண்டன் செல்வார்

## பருத்தித்துறையில் மக்கள் வெற்றித் தினம்

பருத்தித்துறை, வியா.

பருத்தித்துறையில் கடந்த 14-ம் திகதி மக்கள் வெற்றித்தினம் அனுட்டிக்கப்பட்டது. பருத்தித்துறை இ. போ. ச. நிலையம் சிவப்பு, நீல வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டது. இ. போ. ச பஸ் வண்டிகளில் டாக்டர் என். எம். பெரேரா திரு. லெஸ்லி குணவர்த்தன ஆகியோரின் படங்கள் முன்புறக் கண்ணுடியில் ஒட்டப்பட்டிருந்தன. பொலிஸ் நிலையம், நீதிமன்றம் ஆகியவற்றில் தேசியக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. தனிப்பட்ட சில லொறிகளில் சிவப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

### வாழ்த்து

நாவற்குழி, வெள்ளி

---

## மாஸ்கோ தான் இந்தியா பக்கம் சாய்கிறதாம்

### இந்திரா கூறுகிறார்

புதுடில்லி, ஜூன் 19

இந்திய அரசாங்கம் வரவர மாஸ்கோ பக்கம் சாய்ந்து வருவதாக வெளிநாடுகளில் கூறப்படுவதை பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி மறுத்துள்ளார்.

ஜெர்மன்இன்ர்நாடஷனல் என்ற மாதப்பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இந்தமறுப்பை தெரிவித்துள்ளார்.

பார்க்கப் போனுல் மாஸ்கோ தான் எங்கள் பக்கம் திரும்பியுள்ளது. இந்தியாவு சம்பந்தப்பட்டவரையில் மாஸ்கோ கடன் வசதியளித்து உதவியிருக்கிறது. என்றும் பிரதமர் இந்திரா காந்தி பேட்டியில் கூறியுள்ளார். இந்தியாவில் அணுகுண்டு தயாரிக்கப்படமாட்டாது என்றும், நேருவின் கூட்டுச்சேராக் கொள்கைக்கு அதிகமுக்கியத்துவம் உண்டு என்றும் அவர் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## "காசநோயை மாற்றலாம்"

### வைத்திய நிபுணர் கருத்து

தாவடி, வெள்ளி

காச நோயை மற்றைய நோய்களைப்போல நோயாளிகளின் பொறுப்பிலேயே விட்டுவிடமுடியாது. அது ஒரு சமுதாயப் பிரச்னையாகும். சமூக மத்தியில் சில நோயாளர்கள் கவலையீனமாக இருந்துவிட்டால் போதும் அவர்கள் அச்சமூகத்தினரையே நோயாளிகளாக ஆக்கிவிடுவார்கள். எனவேதான் அரசாங்கம், இதை முற்றாகத் தொலைப்பதற்குப் பெருந் தொகைப் பணத்தைச் செலவு செய்து வருகின்றது. இலங்கைத் தேசிய க்ஷயரோக நிவாரண சங்கம் போன்ற தொண்டர் ஸ்தாபனங்களும், காச நோய்க் கெதிரானபோராட்டத்தில் பெரும் பங்கெடுத்துழைப்பது போற்றுதற்குரியது.

இவ்வாறு இலங்கைத் தேசிய கயரோக நிவாரண சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையினரால், திட்டிபாரதி சனசமூகநிலையத்தில் நடாத்தப்பட்ட சுகாதாரவிழாவில் கலந்துரையாற்றிய பண்ணை மார்பு நோய் சிகிச்சை நிலையத்தின் பிரதம வைத்திய அதிகாரி, டாக்டர் திரு. ரி. வாமதேவன் கூறினர்.

திரு. ஜெபராசாவின் தலைமையில் நடந்த இவ்விழாவிலே டாக்டர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'இன்று இந்நோயை முற்றாக ஒழிப்பதில் ... சிகிச்சை பெறும் நோயாளர் முறையாகச் சிகிச்சை பெருமை. இத்தகையகுறைபாடுகளைப் போக்க வேண்டுமானுல் இந்த நோயை மாற்றலாம், இதனுல் அபாயம் எதுவுமில்லை என்ற நம்பிக்கையுடையதாகச் சமுதாயம் இருக்கவேண்டும் இதைப் போன்ற சுகாதார விழாக்களே பெரும் சேவை செய்யப் பயனுடையதான வழிவகைகளை வகுக்கும்என்றும் கூறினர்.

சங்கத்தின் பிரதேச அமைபபாளர் திரு. கு. நடராசன் பேசும்போது; எக்ஸ்றே எடுப்பதே சுகாதாரத்திற்குச் சிறந்த பாஸ்போட் என்றார்.

சங்கத்தின் பிரசார உத்தியோகத்தர் திரு. உ. நதேவகடாட்சம், திரு. எஸ் ஜெயராசா, திரு. ம. ஜேம்ஸ் சங்க அமைப்பாளர், திரு எஸ். ஆர் சரவணபவன் ஆகியோரும் இவ்விழாவில்உரைநிகளத்தினர்.

---

### பெற்றோர்கள் அதிருப்தி

ஊரதீவு, வெள்ளி

புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க சமூகத்தவருக்குள்ள ஒரே ஒரு பாடசாலையும் அதிபரின்றி இயங்குகின்றது. கடந்த ஐந்து மாதங்களாக புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க பாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாகிவிட்டது

நேற்று பொதுத் தேர்தல் ஆரம்பமாவதற்குச் சற்று நேரம்வரை வெளியான அபிப்பிராயக் கணிப்புகளில் தொழிற்கட்சியே பதவிக்கு வருமென்று கருதப்பட்டது ஆனல் இப்பொழுது வெளியாகியுள்ள தேர்தல் முடிவுகளின்படி இந்த அபிப்பிராயக்கணிப்பு பொய்யாக்கப் பட்டுவிட்டது.

தமது கட்சி பதவிக்கு வருமென்பதில் தலைவர் திரு.ஹீத் நம்பிக்கைகொண்டிருக்கிருர். அரசாங்கத்தைப் பொறுப்பேற்கத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிருர்.

ஆனல் தொழிற்கட்சித் தலைவர் திரு.வில்சன் வெளிவந்துள்ள முடிவுகள் குறித்து ஆச்சரியம் தெரிவித்தார். என்ருலும் அவர் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை.

## சர்ச்சைக்குரிய வேட்பாளர் வெற்றி

இப்பொதுத் தேர்தலில் சர்ச்சைக்குரிய பிரச்னைகளை கிளப்பிவிட்ட கன்ச வேடிவ் வேட்பாளர் இனுப் பாவல் என்பவர் இரட்டிப்புப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றிருக்கிருர். இங்கிலாந்தில் ஆசியாக்காரர்களும், வெள்ளையரல்லாதவர்களும் குடியேறுவதற்கு இவர் பெரும் எதிர்ப்புத் தெரிவித்துவந்தார். தேர்தல் பிரசாரங்களின் போது இவர் பேசிய பேச்சுக்களைக் கன்சர்வேடிவ் கட்சியும்கூட ஆமோதிக்கவில்லை என்ருலும் இவரது பிரசாரமும் கன்சர்வேடிவ் கட்சியின் வெற்றிகளுக்கு முக்கிய காரணமாகவிருக்கலாம்.

## மூதாட்டியும் மணமகளும்

நேற்று ஆரம்பமான பொதுத்தேர்தலில் முதல் முறையாக 18 வயதுக்கும் 21 வயதுக்கு முட்பட்டவர்கள் வாக்களித்தார்கள்.

ஒரு தொகுதியில் 91 வயது மூதாட்டி தேர்தல் சாவடிக் சென்று வாக்களித்தார். வாக்களிப்பதற்கான இறுதி வயதைத் தாம் அடைந்துவிட்டதால் தமது கடைசி உரிமையைப் பயன்படுத்த விடும்புவதாக அவர் தெரிவித்தார். இவர் கடந்த 14 ஆண்டுகளாக வாக்களிப்பு எதிலும் கலந்துகொள்ளவில்லையாம்.

20 வயதான இளம்பெண் மேரி என்ற பெண் ஒருவர் திருமணஉடையுடன் தேர்தல் சாவடிச்குவந்து வாக்களித்தார்.

ஒரு தொகுதியில் ஹிப்பிகள் தமதுமுகங்களில் சாயங்களைப் பூசிக்கொண்டு தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

## கட்சிகளின் நிலை

கடைசியாகக் கிடைத்த தேர்தல் முடிவுகளின் படி கட்சிகளின்நிலை பின்வருமாறு:-

| | |
|---|---|
| வெளிவந்தமுடிவுகள் | 416 |
| தொழிற்கட்சி | 226 |
| கன்சர்வேடிவ் கட்சி | 188 |
| லிபரல் கட்சி | 2 |
| மற்றவர்கள் | 2 |

தொழிற்கட்சி 43 இடங்களில் கோட்டைவிட்டுள்ளது கன்சர்வேடிவ் கட்சி 49 இடங்களைப் புதிதாகக் கைப்பற்றியுள்ளது

— —

## மகாராணி

பிரிட்டிஷ் மகாராணியின் பக்கிம்ஹாம் மாளிகையின் சிப்பந்திகளும் ஊழியர்களும் அதிகாரிகளும் அருகாமையில் அமைந்திருந்தசாவடியில் வாக்களித்தனர். மகாராணி வாக்களிப்பதில்லை. அவரது கணவரும் இளவரசர் சார்பிசும் பிரபுக்கள் சபை உறுப்பினர்கள் மகாராணியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சம்பிரதாயப்படி தேர்தலில் வாக்களிப்பதில்லை.

## காமராஜர்படம் மந்திரி திறந்தார்

சென்னை, ஜூன், 19

உளுந்தூர்ப்பேட்டை பேரூராட்சி மன்ற சார்பில் பேரூராட்சி மன்றத்தில் அண்ணு, காமராஜ். படங்களை தமிழக உணவு மந்திரி திரு. ப. உ. சண்முகப் திறந்துவைத்தார்

அவர் இவ் வைபவத்தில் பேசுகையில் காமராஜர் தியாகிகள் வரிசையில்இடம் பெற்றவர் என்றும், மாற்றுக்கட்சியினரையும் அண்ணு மதித்ததால் தான் அவரை மற்றவர்கள் மதித்தார்கள் என்றும் குறிப்பிட்டார்.

முதலில் அறிவிக்கப்பட்டன கிராமப் பகுதிகளின் முடிவுகள் இன்று மாலைவாக்கில் அறிவிக்கப்படும்.

...வியட்... அமைதிப் பேச்சுக்களின் போது வடவியட்... ளும் பிரதிநிதிகள் இந்தக்

...பான்மைத் தமிழ் மக்... வரவேற்பு அளிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளனர்

# வன்முறைகளைத் தூண்டும் கம்-யூனிஸ்ட் தலைவர்களை தண்டிக்ககோரிக்கை

## ராஜாஜி வற்புறுத்து

சென்னை, ஜூன் 19

'கம்யூனிஸ்களின் பலாத்காரமும் ரகசிய நடவடிக்கைகளும் வளர அனுமதிக்க பட்டு விட்டது. அராஜகத் தலைவர்களின் விஷமத்தைத் தடுக்க அரசாங்கத்துக்கு அதிகாரங்கள் இல்லாவிடில் நாட்டில் எழுந்துள்ள நிலைமையைச் சமாளிக்க முடியாது நாடெங்கும் முக்கிய கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கெதிராக அவசர நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதுடன் டில்லியில் துணிச்சலுள்ள உள்துறை மந்திரியொருவர் நியமிக்கப்பட வேண்டும்'

'சுயராஜ்யா' பத்திரிகையில் எழுதியுள்ள தனது கட்டுரையொன்றில் ராஜாஜி மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளார். அந்தக் கட்டுரையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

### மொழிக் கொள்கை

நமது இளைஞர்களின் ஆங்கில அறிவு பெருக முடியாமல் அமுக்க வைப்பதன் மூலம் அவர்கள் உயர்தரக் கல்விக்காக வேறு சர்வகலாசாலைகளுக்கோ அல்லது தமக்கு ஏற்ற வேலைக்காக இதர பகுதிகளுக்கோ, போக முடியாமற் தமிழக அரசு தடுப்பது தற்கொலைக் கொப்பான செயலாகும்

ஆங்கிலத்தைப் போதனு மொழியாகக் கொண்ட வகுப்புகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு தமிழ்நாடு அரசு பல கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது மாணவர்களின் பெற்ருேர்களின் வற்புறுத்தலுக்கிணங்க இந்த விதிகளில் சிலவற்றை தளர்த்தியிருக்கிறது தமிழக அரசு. ஆயினும் நிலைமை இன்னும் அதிருப்திகரமானதாகவே இருக்கிறது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு தம்மால் இயன்றதைச் செய்வதற்கு மாநில அரசினருக்கு உரிமை உண்டு ஆனல் அடுத்த தலைமுறையின் நட்சத்திரங்களாக விள ங்கப் போகிறவர்களுக்கு தடங்கல்களை விதிக்கும் தற்கொலைக்குச் சமமான கொள்கையை பின் பற்றக் கூடாது.

### சுப்பிரமணியம் கண்டனம்

'தமிழ் நாட்டின் அரசுக்கு எதிராகவோ அல்லது அதன் தலைவர்களுக் கெதிராகவோ ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டாலோ அல்லது கருத்துத் தெரிவிக்கப்பட்டாலோ அவ் விடய தில் தி. மு. க. சகிப்புத்தன்மையற்ற போக்கை காட்டுகிறது. இதனல் தமிழ் நாட்டில் மோசமானதொரு நிலைமையுருவாகி வருவதை எல்லா அரசியல் கட்சிகளும் கருத்திற் கொள்ள வேண்டும்'' என்று இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் கேட்டுக் கொண்டுள்ளார்.

நியாயமான குறைகளை தவிர்க்க வேண்டுமென்று கோரி ஆர்ப்பாட்டம் அல்லது கிளர்ச்சி நடத்திஞல் அவற்றை தடியடிப்பிரயோகம் செய்து ஒடுக்கிவிடலாம் என்று தி. மு. க. நம்பிக்கை கொண்டுள்ளதையிட்டு அவர் கண்டனம் தெரிவித்தார்.

கோவை மாவட்டத்தில் விவசாயிகளுக்கெதிராக தி. மு. க. அரசு எடுத்த நடவடிக்கையையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

### அமைச்சர்களுக்கு

## கறுப்புக்கொடி காட்டிய காங்கிரசார் தாக்கப்பட்டனராம்

### விசாரணை நடத்த கோரிக்கை

சென்னை, ஜூன் 19

மதுரையில் அண்ணு சிலை திறப்பு விழாவின்போது நடைபெற்ற அசம்பாவித சம்பவங்கள் குறித்து நீதி விசாரணை வேண்டுமென்று கோரி பழைய காங்கிரஸ் கமிட்டிகள் இளைஞர்கள் காங்கிரஸ், மாணவர் காங்கிரஸ் சார்பில் கறுப்புக் கொடி ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தை தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் திரு. கக்கன் ஆரம்பித்து வைத்தார். ஊர்வலத்தினர் தமிழ்நாடு கவர்னரின் உதவிக்காரியதரிசி நடராஜனிடம் மகஜரொன்றைச் சமர்ப்பித்து அதை கவர்னருக்கு அனுப்பும்படி கேட்டுள்ளனர்.

மதுரையில் நீதிமன்றத்தின் முன்னல் திரு அண்ணுதுரையின் சிலைவைப்பது பொதுமக்களின் விரும்பத்திற்கு மாருனது என்பதை மதுரை நகர ஜில்லா காங்கிரஸ் கமிட்டி பகிரங்கமாக அறிவித்திருந்தும் முதலமைச்சரும், சட்டஅமைச்சரும் சிலையை திறக்கமுன் வந்ததை யொட்டி அதிருப்தி தெரிவிக்க மதுரை காங்கிரஸ்காரர்கள் ஜனநாயக ரீதியிலும் மிக அமைதியான முறையிலும் ஒரு இடத்தில் நின்று அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி காட்டுவதென முடிவுசெய்தார்கள். ஆனல் முதல்நாள் இரவே முக்கியமான காங்கிரஸ் தலைவர்களை பொலிசார் கைது செய்தனர். கறுப்புக்கொடி காட்டப்போனவர்களை பொலிஸ் அதிகாரிகளின் முன்பாகவே 'தமிழர்படை' தாக்கியது. இதுதிட்டமிட்டு செய்யப் பட்டதாக்குதல்

தமிழர் படை தடை செய்யப்படவேண்டும் அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவேண்டும். தாக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடுவழங்கவேண்டும் என்று அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

### பூங்காவனம்

சுழிபுரம், சனி

வழக்கம்பரை மகாமாரி அம்மன் கோவில் பூங்காவன வைபவம் நாளை நடைபெறவிருக்கின்றது.

...பறந்து கொண்டிருந்தன. தனிப்பட்ட சில லொறிகளில் சிவப்புக் கொடிக பறக்கவிடப்பட்டன.

### வாழ்த்து

நாவற்குழி, வெள்ளி

புதிய நியமன எம். பி திரு.எம்.ஸி. சுப்பிரமணியத்துக்கு நாவற்குழி சிறுபான்மை மக்கள் சார்பில் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் நிர்வாக அங்கத்தவர் திரு. எஸ். நாகராசா வாழ்த்துச்செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

...டர் திரு. ரி. வாமதேவன் கூறினர்.

திரு. ஜெபராசாவின் தலைமையில் நடந்த இவ்விழாவிலே டாக்டர் மேலும் பேசுகையில் கூறியதாவது: 'இன்று இந்நோயை முற்ருக ஒழிப்பதில் 3 பிரச்னைகளை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. முதலாவதாக தமக்கு நோய் இருக்கிறதென்றே தெரியாமல் நோயைப் பரப்புபவர்கள் ஒருசாரார். இரண்டாவதாக தமக்கு நோய் இருக்கின்றது என்று தெரிந்தும் சமூகத்திற்குப்பயந்து அதை மறைப்பவர்கள் இன்னெரு சாரார். மூன்ருவதாக

புங்குடுதீவு ருேமன் கத்தோலிக்க சமூகத்தவருக்குள்ள ஒரே ஒரு பாடசாலையும் அதிபரின்றி இயங்குகின்றது. கடந்த ஐந்து மாதங்களாக புங்குடுதீவு ருேமன் கத்தோலிக்க பாடசாலைக்கு அதிபர் எவரும் நியமிக்கப்படவில்லை. இங்கிருந்த அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டபின் புதிதாக எவரும்அங்குவரலில்லை. இது பற்றி இப்பகுதிப் பெற்ருேர் மிகுந்த அதிருப்தி கொண்டுள்ளனர். இவ்விடயம் பற்றி தீவுப்பகுதி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.


புதிய
ஹெடோனல் 'எம்'
40% எம். சி. பி. ஏ. மற்றும் சோடியம், பொட்டாசியம் ஆகிய உப்பு அடங்கிய களை கொல்லி.

பயிர்க் கொல்லிகளை விட்டு வைக்காமல் வேரோடொழிக்கும். உறுதியாக அதிக லாபம் தரும்.



விளைபொருள்களை உறுதுணை நின்று காக்கும் ஹெடோனல் 'எம்',

நெல், கரும்பு, சோளம், மற்றும் புற்றரைகளைப் பாதிக்கும் அகன்ற இலைக்களைகளையும், புதர்ச் செடிகளையும் செப்பமாகவும் சிக்கனமாகவும் ஒழித்துவிடும்.

பயிர்களையும் பண லாபத்தையும் பாதுகாக்கப் பாவியுங்கள் ஹெடோனல் 'எம்'.

நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்—
பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்!

மூலப் பொருட்சத்து உற்பத்தியாளர்: பேயர் ஜெர்மனி
இலங்கையில் தயாரிப்போர்: ஹேக்கெம் லிமிட்டெட் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.



### மணிவாக்கு

நல்ல நூல்களைப் படிப்பதன் மூலம் எதையும் பகுத்துணரக்கூடிய நுட்பமான உணர்வையும் நல்ல நடையுடை பாவனைகளின் பண்பாட்டையும் பழகிக்கொள்ளலாம்.

— ஒளவையார்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna;
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆனி மாதம் 6-ந் திகதி (20-6-70)


## பனைக்கு நல்ல காலம்

யாழ்ப்பாணத்தின் கற்பகதரு எனக் கூறப்படும் பனை மர விஷயத்தில் புதிய தோட்டக் கைத்தொழில் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா விசேஷ கவனம் செலுத்த முன்வந்தது நன்றியுடன் வரவேற்கத்தக்கதாகும். பனை மரத்தின் மூலம் பல பொருட்களை உற்பத்திசெய்வதுபற்றியும், பனங் கைத்தொழிலை ஏற்படுத்துவது பற்றியும் ஆராய ஒரு விசேஷ கமிட்டியை அவர் நியமிக்கத் தீர்மானித்திருக்கின்றார். சிறிய அளவிலும் பெரிய அளவிலும் பனந்தோட்டங்களைப் பயிரிடுவது பற்றிய பிரச்னைகளை அக் குழுவினர் ஆராய்வதுடன், பனையில் இருந்து பல பொருட்களை உள்நாட்டு உபயோகத்துக்கும், ஏற்றுமதிக்குமாக தயாரிப்பதைப்பற்றி ஆராய்ச்சிசெய்ய ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தவும் அமைச்சர் செய்துள்ள முடிவை அறிய சிறப்பாக ஈழத் தமிழரின் மனம் குளிரும்.

பனையின் ஒவ்வொரு பாகமும் பயன்படுவதாகும். எதுவும் வீணல்ல. வைரம் பாய்ந்த பனைமரத்தை வீட்டுக்கான நல்ல பலமான உத்தரங்களுக்கு பாவிக்கலாம். அதன் உள்ளிருக்கும் நரம்புகளுடன் கூடிய கட்டையில் இருந்து பல விளையாட்டுப் பொருட்களைச் செய்வதற்காக பல வெளிநாடுகள் பாவிப்பதால் அவற்றை ஏற்றுமதிசெய்யலாம். பனங்கட்டி, குளுக்கோஸைப் போல் நல்ல உணவாகவும் மருந்தாகவும் குழந்தைகளுக்கு பாவிக்கலாம். அதன் ஓலைகளிலிருந்து விசிறிகள், கூடுகள் முதலியனசெய்யப்படுகின்றன. 'ஜாம்', ஊறுகாய் இவற்றை பனம்பழத்திலிருந்து சரிக்கட்டுவதுடன், பதனீரிலிருந்து சீனியும் உற்பத்திசெய்யலாம். அம் மரத்தின் அடி முதல் நுனி வரையில் ஒவ்வொரு பாகத்தில் பனையிலிருந்து சீனி முதலிய பலபல பண்டங்களையும் உற்பத்திசெய்து அதிகலாபம் பெறுகின்றனர். ஈழத்திலே நாம் பதநீரில் இருந்து சீனி, வெல்லம் இவற்றை உற்பத்திசெய்தோமாயின், சீனி இறக்குமதியை வெகுவாகக் குறைக்கலாம். நமது செல்வம் அந்த அளவில் வெளியேறுமல் தடுக்கப்படுவதுடன் இங்கு இந்தத் தொழிலால், ஏராளமானவர்களுக்கு வேலையும் கிடைத்து, வேலையில்லாக்கஷ்டமும் குறையக்கூடும். இதைப்பற்றி நாம் இப் பத்திகளில் ஏற்கனவே பன்முறையும் எழுதியுள்ளோம். புதிய அமைச்சர் பதவிஏற்றதும், இவ் விஷயத்தில் முக்கிய கவனம் செலுத்தியுள்ளதால், அவர் இதன் முக்கியத்தை நன்கு உணர்ந்து காரியத்தில் ஈடுபட முன்வந்தது பெரிய காரியம்.

இவ்விஷயத்தில் இந்தியா பெரிதும் முன்னேறியிருப்பதால், ஆராய்ச்சிசெய்வதற்கு அமைச்சர் நியமிக்கும் விசேஷ குழுவுக்கு, தமிழகத்திலிருந்தும் ஒரு தக்கவரை நியமிப்பது பலவிதங்களிலும் பயன் உள்ளதாக இருக்கும். இக் குழுவினர், அவசியமாயின், தமிழகத்துக்கு நேரில் சென்று அங்கு இவ் விஷயமாக நடைபெறும் காரியங்களைப் பார்த்து வரலாம். இயற்கை அன்னை நமக்களித்துள்ள இவ்வித செல்வங்களை நாம் பூரணமாகப் பயன்படுத்துவதன் மூலம் நமது பொருளாதார, உணவுப் பிரச்னைகளை தீர்த்துக்கொள்ள முற்படுவது தான் நல்லது. நமக்குத் தேவையானவற்றை இயற்கை அன்னை தந்திருக்கிருள். அவற்றைச் சரிவர நாம் பயன்படுத்தாதுதான் நமது பொருளாதாரத்துக்கும், வேலையில்லாக்கஷ்டங்களுக்கும் காரணம். அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இப்போது

# பிரிட்டிஷ் ஜனநாயகம்!

## மகாராணியின் அந்தஸ்தும் பிரதமரின் அதிகாரங்களும்!!

[பிரிட்டனில் பொதுத் தேர்தல் முடிவடைந்து வெற்றிபெற்ற கட்சி ஆட்சியமைக்கவிருக்கும் இச்சமயத்தில், அந்நாட்டின் ஆட்சிமுறை பற்றிய விபரத்தை இங்கு பிரசுரிக்கிறோம்.]

பாராளுமன்ற அரசியல் சித்தாந்தத்தையும் அத்துடன் ஜனநாயக ஆட்சிமுறையையும் உலகிற்கு அளித்த பெருமை பிரித்தானியாவையே சாரும். பல நூற்றுண்டுகாலம் பரிணும வளர்ச்சிபெற்று, மக்களின் அதிகாரத்தை நிலைநாட்டும் ஓர் உன்னத அரசோச்சும் மரபாகப் பாராளுமன்ற முறை இங்கிலாந்தில் நிலைபெற்றுள்ளது.

அரசர்களின் அதிகார வெறிக்கும், ஆதிபத்தியப் போக்கிற்கும் சாதாரண மனிதன் விடுத்த ஒரு சவாலாக உதயமானதுதான் பிரித்தானிய பாராளுமன்றம். எனவே பாராளுமன்ற முறை என்பது மக்களின் அபிலாசைகளை, விருப்புகளைப் பூர்த்திசெய்ய மக்களால் நிறுவப்படும் மக்கள் ஆட்சி முறை என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. இதனையே ஜனநாயகப் பண்பு என்று அரசியல் அறிஞர்கள் கூறுவதுண்டு.

ஜனநாயகப் பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு மக்கள் இயக்கங்கள் அதாவது கொள்கைத் திட்டங்களுடைய அரசியல் கட்சிகளே முதுகெலும்பாக உள்ளன. பெரும்பான்மையான மக்களின் விருப்பைப் பெறும் அல்லது அங்கீகாரத்தைப் பெறும் ஓர் அரசியல்கட்சிதான் ஆட்சிபீடம் ஏறமுடியும்.

பிரித்தானிய அரசியல்கட்சிகள் நீண்டகால வரலாற்றைக்கொண்டவை. தேசிய மரபிற்கிசைய வளர்ந்தவை சமுதாய மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து நிலைத்தவை. இந்த ரீதியில் ஜனநாயகத்தில் திளைத்த இரு பெரும் கட்சிகள் இன்று இங்கிலாந்தின் அரசிய அரங்கில் சக்திவாய்ந்தனவாக விளங்குகின்றன.

பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெறும் அரசியல் கட்சிதான் ஆட்சிபீடம் ஏற முடியுமென்பதால் பொது ஜனங்களும் தனிநபர்களுக்கன்றி கட்சிக்கே வாக்களிக்கிறார்கள்; ஆகவே பிரதான அரசியல் கட்சிகளின் நியமனம்பெருத எந்த அபேட்சகரும் பாராளுமன்றத்தில் காலடி எடுத்துவைப்பது சிரமமான விஷயம் 1966ம் ஆண்டு நடைபெற்ற பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் 630 அங்கத்தவர்களைக் கொண்ட மக்கள் சபையில் தொழிற்கட்சி, கன்சர்வேடிவ் கட்சி ஆகிய இரு பெரும் அரசியல் இயக்கங்களைத் தவிர்ந்த 14 அங்கத்தினர் மட்டும் தெரிவுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று பிரித்தானியாவில் பலம் வாய்ந்த அரசியல் கட்சிகள் தொழிற் கட்சியும்

### மகாராணியின் உரிமை

ஆதியில் அரசனே பாராளுமன்றத்திற்கு அதிபதியாக இருந்து வந்தார். ஆனால் காலப் போக்கில் அரசனிடமிருந்து சகல அதிகாரங்களையும் பாராளுமன்றம் அபகரித்துக் கொண்டது. ஆயினும் பாரம்பரிய மரபுகளைக் கட்டிக் காக்க விரும்பும் பிரிட்டிஷார் இன்றும் முடியரசையே பாராளுமன்றத்தின் உயர் பீடமாகக் கொள்கின்றனர். இது வெறும் மரபு வழக்கமே தவிர உண்மையில் நாட்டை ஆளும் சர்வ அதிகாரமும் பாராளுமன்றத்திடம் தான் உள்ளது. இன்று இன்று பிரித்தானிய மகாராணியார் பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் தான் கருமமாற்ற முடியும்.

பாராளுமன்ற திறப்பு விழாவின் போது மகாராணியார் தான் சிம்மாசனப் பிரசங்கத்தை வாசிப்பது மரபு. எனினும் சிம்மாசனப் பிரசங்கத்தை எழுதிக் கொடுப்பதும், கொள்கைத் திட்டங்களை வகுத்துக்கொடுப்பதும் புதிய அரசாங்கம் தான். சுருங்கச் சொல்லப் போனால் மகாராணியார் மக்களின் மதிப்புக்குரிய தேசிய சின்னமாக விளங்குகிறாரே தவிர அவருக்கு அரசியல் அதிகாரங்கள் இல்லை.

பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட அரசியல் கட்சியின் தலைவர் தான் பிரதம மந்திரியாக பதவி ஏற்கிறார். ஜனநாயக பாராளுமன்ற முறையின்கீழ் சகல வல்லமையும் படைத்தவர் பிரதம மந்திரியாவார். அமைச்சர்களை நியமிப்பதும் அவர்களுக்கான இலாகாக்களை ஒதுக்குவதும், விரும்பினால் அவர்களது ராஜினாமாவைக் கோருவதும் இப்படியான பெரிய அதிகாரங்கள் அவரிடமுண்டு.

ஆழமான அரசியல் கண்கொண்டு பார்த்தால் பிரதம மந்திரியையும், மந்திரி சபையையும்விட உயர்வதிகாரம் பாராளுமன்றத்திடம் ணமாகவே ஜனநாயகப் பாராளுமன்ற ஆட்சிமுறை மக்கள் ஆட்சிமுறையென வர்ணிக்கப்படுகிறது.

ஆளுங் கட்சி தனது அதிகாரத்தைத் தவறுதலாகப் பிரயோகிக்காத வண்ணம் தடுத்து நிறுத்துவதற்கான நடைமுறைகள், பிரித்தானியப் பாராளுமன்றத்தில் நீண்டகால அரசியல் அனுபவத்தின் பலாபலனுக ஏற்பட்டுள்ளன. உதாரணமாக எதிர்க்கட்சியினர் ஆளுங் கட்சியின் அரசியல்போக்கைக கண்டிப்பதுமட்டுமன்றி அதன் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் சக்தியாகவும் விளங்கிவருகிறது. அத்துடன் மேற்சபைக்கு அரசாங்கத்தின் மசோதாக்களைத் தாமதிக்கும் அதிகாரம் உண்டு. இதுமட்டுமன்றிக் கேள்விநேரத்தில் நாட்டு நிர்வாகம் பற்றியும் ஆட்சியாளர்களின் போக்கு பற்றியும் அங்கத்தினர்கள் அமைச்சர்களிடம் சரமாரியாகக் கேள்விக்கணை விடுக்கலாம்.

பிரித்தானியாவில் பிறந்து வளர்ந்த இந்தப் பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையை இன்று உலகின் பல நாடுகள் தழுவிவருகின்றன. இந்த உன்னதமான அரசியல் முறையின்கீழ் ஓர் அரசாங்கத்தை அமைப்பதற்கும் அதனை வீழ்த்துவதற்குமான சர்வாதிகாரம் மக்கள் கையில்தான் இருக்கிறது.

— —

## தமிழ்காங்கிரஸ் எம். பி. க்களுக்கு வரவேற்பு

பருத்தித்துறை, வியா.

கடந்தஆட்சிமன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. தியாகராசா, நல்லூர் எம். பி. திரு. எஸ். அருலம்பளம், கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி ஆகியோருக்கு ஒரு பொது வரவேற்பளிக்க கரவெட்டி தமிழ்க்காங்கிரஸ் கிளை தீர்மானித்துள்ளது. வரவேற்பு இம் மாதம் 26-ம் திகதி மாலை அத்துழுவில் நடைபெறும்.

— —

## எதிரிகுற்றவாளி

வல்வெட்டித்துறை, வியா

அல்வாய் தெற்கைச் சேர்ந்த சூரன் மகள் சிவபாக்கியம் என்பவரை அதே இடத்தைச் சேர்ந்த மயில்வாகனம் பெண்மனோகரி என்பவர் இரும்புக்கம்பியால் அடித்து படுகாயம்

## மின் வழங்கும் பிரச்னை

மாவிட்டபுரம், வெள்ளி

மயிலிட்டி கிராமசபை 8-ம் வட்டாரத்துக்கு மின் வழங்கும் பிரச்னை இன்னும் தீர்ந்தபாடில்லை,

மயிலிட்டி கிராமசபையில் பலாலி, மயிலிட்டி பகுதிக்கு மின்சாரம்வழங்க சபை அனுமதித்தும் பின் சபையின் உத்தரவு இல்லாமல் வசாவிளான்-ஒகட்டகப்புலம் பகுதிக்கு மின்வழங்க நடவடிக்கை எடுத்ததை யிட்டுஎழுப்பட்டபிரச்னையே இன்னும் தீர்ந்தபாடில்லை.

நேற்று நடந்த சபையின் மாதாந்த கூட்டத்தில் இது பற்றி 8-ம் வட்டார அங்கத்தவர் திரு. பூ. பொன்னம்பலம் கொண்டுவந்த நிறை

# அரசியல்வண்டு

ஒரு தமிழரை அமைச்சரவையில் நியமிக்க, அரசாங்கக்கட்சியிலேயே சிலர் முணுமுணுத்தார்களாம். பிரதமர் ஸ்ரீமா இதைக் கேட்டுவிட்டு, "நான்கு தமிழரை அமைச்சர்களாக நியமிக்கவேண்டும். ஆனால் ஆள் கிடைக்காததாலேயே ஒரு தமிழரை மட்டும் நியமிக்க வேண்டியுள்ளது" என்று உறுதியுடன் பதிலளித்ததும் முணுமுணுப்பெல்லாம் அப்படியே நின்றுவிட்டனவாம்.

0 0 0

பார்லிமெண்ட் சபையின் தலைமைப் பதவிக்கு போட்டியின்றி ஒருவரை சிபார்சு செய்யும்படி பிரதமர் ஸ்ரீமா தமது கட்சியினரைக் கேட்டிருந்தாராம். ஆனால் பலபேர் போட்டியிட்டனர். ஒரு மனமான முடிவு ஏற்படவில்லை என்று அறிந்ததும் 'இன்னும் பத்து நிமிஷம் கொடுக்கிறேன் யோசித்து ஒரு முடிவு செய்யுங்கள் இல்லாவிட்டால் நானே இதற்கு ஒரு முடிவு கூறுவேன்' என்று பிரதமர் அறிவித்தார். அப்படியும் வேற்றுமை நீங்காததால், பிரதமரே 'திரு. ஸ்டான்லி திலகரத்னவை தலைவர் பதவிக்கு சிபார்சுசெய்கிறேன்' என்று அறிவித்ததும், யாரும் பதில் பேசவில்லை. முடிவில் திரு. ஸ்டான்லியே ஏகமனதாக அப்பதவிக்கு தெரிவுசெய்யப்பெற்றார்.

0 0 0

சபைத் தலைவராக திரு. ஸ்டான்லி திலகரத்ன போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டதும், அவரைப் பலரும் பாராட்டினர். நல்லூர் பிரதிநிதியான திரு. அருளம்பலம் மட்டுமே தமிழில் பேசி தமது பாராட்டைத் தெரிவித்தாராம்.

0 0 0

சிம்மாசனப்பிரசங்கத்தின் மீது கவர்னர் ஜெனரலுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைப்பற்றிய விவாதத்தில் ஒவ்வொரு கட்சிக்கும் எவ்வளவு நேரம் ஒதுக்குவதென்பது பற்றி ஆலோசனை நடந்தது. அரசாங்கக்கட்சிகளுக்கு 14 மணிநேரமும், ஐ. தே. கட்சி, தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் இக்கட்சிகளுக்கு மொத்தம் 10 மணி நேரமும் ஒதுக்குவதென்று முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

0 0 0

பொதுத்தேர்தல் முடிவு தெரிந்ததும், முன்னாள் பிரதமர் ... அளித்ததும், தமது கட்சிக்கு படுதோல்வி ஏற்பட்டதும் அவருக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்ததாயும், ஆகவே தாம் அரசியலிலிருந்துவிலகி, துறவு பூணவிரும்பியதாயும் ஆனால் பிரதமர் ஸ்ரீமா இதைப்பற்றி 'சிரிக்கலாம்' என்று கூறப்பட்டதும் அவர் தாம் எம். பி யாக தொடர்ந்திருக்க சம்மதித்தாராம். ஆனால் எதிர்க்கட்சித் தலைவராக இருக்க அவர் மறந்துவிட்டார். அதனால்தான் ஜே. ஆர். அப்பதவியில் இருந்துவருகிறார்.

சிம்மாசனப்பிரசங்கத்தின் போதும் திரு. டட்லி வராதது குறிப்பிடத்தக்கது. திரு பிரேமதாஸாவும் கலந்துகொள்ளவில்லையாம் திரு ஜே ஆரை தமக்கு அடுத்தபடியாக வரும்படி பிரதமர் ஸ்ரீமா அழைத்ததின் மீது அவரும் அவருடன் ஊர்வலமாகச் சென்று, சபையில் அவர் பக்கத்தில் அமர்ந்தார்,

0 0 0

சில நாட்களுக்கு முன் கொழும்பு வெள்ளவத்தையில் ஒரு பழக்கடையில், சிலகாடையர் புகுந்து 'அப்பே ஆண்டுவா' என்று கோஷித்துக் கொண்டு கடையிலிருந்த பழங்களை தாங்களே எடுத்து உரித்து உரித்து சாப்பிட்டார்கள். பிறகு அப்பே ஆண்டுவா' என்று கூறிக் கொண்டே, காசு கொடுக்காமல் கடையை விட்டுச் சென்றனராம்.

காடையர்களுக்கு புதிய அரசாங்கம் வந்ததும், வருமானம் தடைபட்டுவிட்டதாம். கசிப்பு, கஞ்சா விற்பவர்களுக்கும் அவர்களை அண்டிவாழும் காடையர்களுக்கும் பிழைப்பு இல்லாது போகவே இப்படி காடைத்தனங்களில் ஈடுபடுவதாகவும் அரசாங்கம் இதைப் பற்றி அதிக கவனம் செலுத்தி பொதுமக்களைப் பாதுகாக்க முனைந்துள்ளதாகவும் தெரிகிறது.

0 0 0

திருகோணமலையில் நடந்த தேர்தல் கூட்டத்தில் ஸ்ரீமா பேசியதாவது: 28ந் திகதி நாங்கள்தான் மந்திரிசபையை அமைக்கப்போகிறோம். இது நிச்சயம். அப்போது எங்களுக்குப் பணம் தேவை. ஆர். ஜி சேனநாயகவும் அவரதுகட்சியினரும்கட்டுப் பணத்தையும் இழப்பதன் மூலம் எங்கள் அரசாங்கத்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கூடுகள் முதலியனசெய்யப்படுகின்றன. 'ஜாம்', ஊறுகாய் இவற்றை பனம்பழத்திலிருந்து சரிக்கட்டுவதுடன், பதனீரிலிருந்து சீனியும் உற்பத்திசெய்யலாம். அம்மரத்தின் அடி முதல் நுனி வரையில் ஒவ்வொரு பாகமும் நமக்குப் பயனுள்ளது. இயற்கை அன்னை அளித்துள்ள இந்த நல்ல செல்வத்தை நாம் சரிவரப்பயன்படுத்தினேமாயின் நமது பொருளாதார கஷ்டங்கள் ஓரளவு குறையக்கூடும்.

அண்மையிலுள்ள தமிழகம் ...றன். அவற்றைச் சரிவர நாம் பயன்படுத்தாதுதான் நமது பொருளாதாரத்துக்கும், வேலையில்லாக்கஷ்டங்களுக்கும் காரணம். அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இப்போது எடுத்துள்ள இந்த முயற்சியால் நமது பனைக்கு நல்ல காலம் பிறந்துள்ளதென்றே கருதுகிறேம். அமைச்சரின் இம் முயற்சிக்கு சிறப்பாக ஈழத்திலே பனைவளமுள்ள பகுதி பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பும் கிடைக்குமென்பது உறுதி.

## பிரிட்டிஷ் தேர்தல் முடிவு

இதை எழுதுகையில் பிரிட்டிஷ் பொதுத் தேர்தல் முடிவுகள் வந்துகொண்டிருக்கின்றன. தொழிற்கட்சி பல ஸ்தானங்களை இழந்துள்ளதும், வெள்ளையரல்லாதார் குடியேற்றத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்யும் ஈனுக்பவலுக்கு முன்னை விட அதிகமான வாக்குகள் கிடைத்துள்ளதையும் பார்த்தால், பிரிட்டிஷ் பொதுமக்களின் மனம் எந்தப்பக்கம் சாய்ந்து வருகிறதென்பது தெரிகின்றது.

பிரிட்டிஷ் பொதுமக்களின் இந்தத் தீர்ப்பின் பயனாக, இலங்கை, இந்தியா முதலிய காமன்வெல்த் நாடுகளிலிருந்து மக்கள் அங்குசெல்ல இனி அதிக கடுமையான தடைகள் ஏற்படலாம். பிரிட்டிஷ் பொதுமக்கள் என்ன காரணம் பற்றி இந்தத் தீர்ப்பை அளித்திருப்பினும் சரி, காமன்வெல்த்திலுள்ள வெள்ளையரல்லாத பல நாடுகளுக்கும் அவ்வளவு மகிழ்ச்சியோ, நம்பிக்கையோ அளிக்க முடியாது. நிறவேற்றுமைக்கொள்கையை பிரிட்டனின் புதிய அரசாங்கம் மேற்கொள்ளப்போகின்றதா? அப்படியாயின் இந்த 'காமன்வெல்த்' குடும்பத்தில் இலங்கை, இந்தியா முதலிய நாடுகள் நீடித்திருப்பதைப் பற்றிப் புனராலோசனை செய்ய வேண்டியிருக்கும். 'காமன்வெல்த்' என்றால் பொதுச் செல்வம் என்று பொருள். ஆனால் காமன்வெல்த் வெள்ளையர்களுக்கு மட்டுமே உரிமை என்றும், அவர்களுக்கே இதில் சலுகைகள் உண்டென்றும் ஏற்படுமாயின், அதில் மற்ற காமன்வெல்த் நாடுகள் தொடர்ந்து நீடித்திருப்பது அவற்றின் தேசிய மானத்துக்கு உகந்ததாகாது.

...கத் தவிர்ந்த 14 அங்கத்தினர் மட்டும் தெரிவுசெய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று பிரிட்டனில் மிகப் ப...ம் வாய்ந்த அரசியல் கட்சி... தொழிற் கட்சியும் கன்சர்வேடிவ் கட்சியும் தான். முன்பொரு காலம் ஆதிக்கம் பெற்று விளங்கிய லிபரல் கட்சி இன்று செல்வாக்குக் குறைந்து பலம் குன்றிய அரசியல் கட்சியாக இருந்து வருகிறது. இப்போதைய பொதுத் தேர்தலில் ஆட்சிபீடம் அமைக்கும் பலப்பரீட்சையில் ஈடுபட்டிருப்பது தொழிற்கட்சியும் கன்சர்வேடிவ் கட்சியும் தான்.

...அவரிடமுண்டு.

ஆழமான அரசியல் கண்கொண்டு பார்த்தால் பிரதம மந்திரியையும், மந்திரி சபையையும்விட உயர்வதிகாரம் பாராளுமன்ற...டம் தான் உண்டென்...தை விளங்கிக் கொள்ளலாம். பாராளுமன்றத்தின் பெரும்பான்மை அங்கத்தினரின் நம்பிக்கையை இழக்கும்பட்சத்தில் பிரதமரும், மந்திரி சபையும் ராஜினுமாசெய்வதைத் தவிர வேறுவழியில்லை எனவே பாராளுமன்ற அங்கத்தினரைத் தெரிவுசெய்யும் மக்களே இறுதியான, உச்சமான அதிகாரத்தைக் கொண்டவர்கள். இதன்கார...

அல்வாய் தெற்கைச் சேர்ந்த சூரன் மகள் சிவபாக்கியம் என்பவரை அதே இடத்தைச் சேர்ந்த மயில்வாகனம் பெண்மனேகரி என்பவர் இரும்புக்கம்பியால் அடித்து படுகாயம் விளைவித்தும் கையை திருகி முறித்ததாகவும் பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்பின் மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு இம் மாதம் 25-ந் திகதிக்கு தீர்ப்பை ஒத்திவைத்துள்ளார்.

— —

## "இறைவன் வாரிவழங்குகிறுன்

தாவடி, வெள்ளி

"மனிதன் அறிவைக் கண்டு புகழ்கின்றுன். ஆற்றலைக் கண்டு மகிழ்கின்றுன். அதிகாரத்துக்கு அடிபணிகின்றுன், அன்பிற்குக் கட்டுப்படுகின்றுன். ஆனல் அருளைக்கண்டு வியப்படைகின்றுன். கலைஞர்களாலும், கவிஞர்களாலும் போற்றப்படும் தாய்க்குப் பெண்மையின் உருவையும் கொடுத்து அன்பையும் அதனுடன் இணைத்துள்ளான் இறைவன். பாலூட்டி, உணவூட்டி, அன்புடன் பாதுகாத்துவளர்க்கும் தாயையும் படைத்தவன் இறைவன். என்னே! அவ்விறைவனுடைய அன்பு. தாயினும் பார்க்க மேலான அன்புகொண்டவன் இறைவன்"

இவ்வாறு, மானிப்பாய் புனிதஅந்தோனியார் திருநாள்விழாவிலே உரையாற்றிய வண என். எம். சவரிமுத்து சுவாமியார் கூறினுர்:

"முல்லைக்கு ஒருமுறைதான் தேரீந்தான் பாரிமன்னன். கர்ணனேவெனின் வாரிவழங்கித் தன் கைகளே சிவந்தான், இறைவனே சகல ஜீவராசிகளுக்கும் என்றும் வாரிவழங்கிக் கொண்டு இருக்கின்றுன் எவ்வளவு ஆழ்ந்து, விரிந்து பரந்த அன்புடையவன் ஆண்டவன்" என்று அவர் மேலும் பேசும்போது குறிப்பிட்டார்.

துதிப்பாடல்கள், நாடகங்கள் என்பனவும் இடம் பெற்றன.

கரம்பொன் இந்துமா மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இவ்விழாவில் பண்டிதை தங்கம்மா ஆப்பாக்குட்டி, க சிவராமலிங்கம், ஆ. தியாகராசாபிள்ளை ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்.

## யாழ்ப்பாணம்

## ஆயுர்வேதக்கல்லூரி பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

வடஇலங்கை சுதேச வைத்திய சபையார், யாழ்ப்பாணம் லங்கா ஆயுர்வேதக் கல்லூரியில், சென்ற ஏப்பிரல் மாதம் நடந்த வருடாந்தப் பரீட்சையில் சித்தியடைந்தோரின் விபரத்தை தராதர ஒழுங்கின்படி வெளியிட்டிருக்கிறுர்கள் விபரம் பின்வருமாறு:

**மூன்றும் வருடம்**

எஸ். பத்மாவதி 1ம்பிரிவு), எஸ். மேரிசோபியா (1ம் பிரிவு), ஆர். எஸ். கௌரி(1ம் பிரிவு), எம். என். ஜெயமலர்(2ம் பிரிவு), எஸ். ரி. பாலரத்தினம்(2ம்), எஸ். சர்வேஸ்வரன்(2ம்), ஏ. மேரி இராணி(2ம்), ரி. நாகேஸ்வரி (2ம்), ஏ. மேரி கிறேஸ்(2ம்) ரி. சிவானந்தன்(2ம்), எஸ். பரராசசிங்கம்(2ம்).

**இரண்டாம் வருடம்**

ஆர் மங்களாம்பிகை (1ம் பிரிவு), எஸ். விசயநாயகி 1ம்), எப் எக்ஸ் பிலோமினு (2ம்), ஏ. அமிர்தநாதன் (2ம்), கே. இந்துமதி(2ம்), கே. வரதராசா(2ம்), ஜி தில்லைநாயகம்(2ம்).

**முதலாம்வருட**

எம். சரோஜினிதேவி (2ம் பிரிவு), கே. உமாதேவி(2ம்), எஸ் இந்திராணி(2ம்), கே. கனகரத்தினம்(2ம்), எஸ். சந்திரமோகன், ஆர். தங்கேஸ்வரி, ஆர். பாக்கியநாதன்.

## 'அழுக்கைப் போக்கினுல் ஆண்டவனை அடையலாம்

தாவடி, வெள்ளி

'ஆலயம் அகத்தின் அழுக்கைப் போக்கி தூய்மையாக்குகின்ற திருக்குளம் தினமும் அக்குளத்தில் சென்று அரகரமகாதேவா என்ற சவர்க்காரத்தைத் தேய்த்து அழுக்கை நீக்கினுல் ஆண்டவன் எல்லோருடைய உள்ளங்களிலும் குடிகொள்ளுவான். ஆலயங்களிலே கைகட்டிக்கொண்டு நிற்பது தவறு. நீதிபதிக்கு முன்னதாகவே கைகட்டிக்கொண்டு நிற்க அஞ்சும் நாம், நீதிபதிக்கு நீதிபதியான இவ்வுலகங்களெல்லாவற்றின் நீதிபதியாகிய ஆண்டவன் சந்நிதியின் கண்ணே கைகட்டிக்கொண்டு நிற்பது முறையல்ல'

இவ்வாறு தாவடி வேம்படி ஸ்ரீமுருகன் ஆலயத்தில் நடைபெற்ற கதாகாலக்ஷேபத்தின்போது, தமிழ்மணி திரு. எஸ் கணேசசுந்தரம் குறிப்பிட்டார்

'சைவக் குழந்தைகள் திருமுறையை முறைப்படி பாடக்கற்றுக்கொள்ளுதல் வேண்டும். பண்ணிசை பாடி வழிபாடு செய்கின்ற அடியவர்களுக்கு, மண்ணுலக நல்வாழ்வும் விண்ணுலக நல்வாழ்வும் கிடைக்கும் என்று சம்பந்தப் பெருமான் திருமுறையின் கண்ணே இனிது பாடியிருக்கின்றுர்.

'முத்தைதரு பத்தித் திருநகை' என்ற திருப்புகழ் யாரால் பாடப்பட்டது என்று கேட்டால் சௌந்தரராசனுல் எனச் சொல்லும் பிள்ளைகள் கூட இருக்கிறுர்கள், இந்நிலை மாறவேண்டும்' எனவும் அவர் மேலும் கூறினுர்

இ...ன்னும் தீர்ந்தபாடில்லை.

நேற்று நடந்த சபையின் மாதாந்த கூட்டத்தில் இது பற்றி 8-ம் வட்டார அங்கத்தவர் திரு. பூ. பொன்னம்பலம் கொண்டுவந்து நிறைவேற்றிய தீர்மானம் வருமாறு:-

இச்சபையின் முன்னுள் தலைவர் சி. அருணுசலத்தால் 20-5-70 ல் அரசரெட்னம் கொம்பனியுடன் பலாலி-மயிலிட்டி மின் விஸ்தரிப்பு வேலைகளுக்கு 1966 - ல் ஓர் ஒப்பந்தம் செல்யப்பட்டது. அதன் பின் தலைவராகவந்தவருக்கும், அரசரட்ணம் கொம்பனியாருக்கும் இடையில் இச்சபையின் அங்கீகாரம் இன்றி நேர்மையீனமான ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இது செல்லுபடியாகாததால் தவறுன முறையில் இடம்பெற்ற இம் மின்விஸ்தரிப்புக்கு எடுத்த கடன்தொகையிலிருந்து அவர்களுக்கு எந்த தொகையும் விடுவிக்க கூடாது என்று சபை தீர்மானிக்கிறது

— —

### சுவரில் எழுதியவர் பொலிசில்

பருத்தித்துறை, வெள்ளி

தனிப்பட்ட ஒருவரின் வீட்டுச்சுவரில் அவதூருக எழுதிய இளைஞர் ஒருவரை நெல்லியடிப் பொலிசார் கைதுசெய்து விசாரித்தனர். இவ்விதசெய்கைகள் நெல்லியடிப் பகுதியில் அதிகரித்து வருவதைத் தடுக்கு முகமாக ரோந்து சுற்றிவந்த பொலிசாரிடம் இந் நபர் அகப்பட்டார், அரசியல் குரோதம் காரணமாக இவ்விதசெய்கைகள் ஏற்படுவதைத் தடுக்கும் முயற்சியில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

— —

## 6 இராணுவ அதிகாரிகளுக்கு மீண்டும் வேலை

கொழும்பு வெள்ளி

சதிவழக்கு சம்பந்தமாக பதவி நீக்கஞ் செய்யப்பட்ட இராணுவ அதிகாரிகள் 6 பேருக்கு மீண்டும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது'

ராஜன் கொண்ட குணி உட்பட 6பேருக்குவேலைக்கு வரும்படி அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளது ஏற்கனவே இது சம்பந்தமாக 33பேருக்குமீண்டும் நியமனம் வழங்கப்பட்டதுதெரிந்ததே.

...நேரமும் ஒதுக்குவதென்று முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

0 0 0

பொதுத்தேர்தல் முடிவு தெரிந்ததும், முன்னுள் பிரதமர் டட்லி சேனநாயக அரசியலிலிருந்தே ஓய்வுபெறத் தீர்மானித்தாராம். தாம் இவ்வளவெல்லாம் செய்தும் தமது தொகுதி மக்களே தமக்கு இம்முறை முன்னைவிட குறைந்த வாக்குகள் ... நிச்சயம். அப்போது எங்களுக்குப் பணம் தேவை. ஆர். ஜீ சேனநாயகவும் அவரதுகட்சியினரும்கட்டுப் பணத்தையும் இழப்பதன் மூலம் எங்கள் அரசாங்கத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாய்க்குமேலும் உதவக்காத்திருக்கிறுர்......" இந்த அரசியல் சோதிடம் அப்படியே உண்மையாயிற்று.

## 'பள்ளி மாணவர்களின் தாய்மொழிபற்றும்பாசமும்'

முசலி, வெள்ளி

இலங்கை சுதந்திரம் அடைந்தபின் இந்நாட்டில் வாழும் பெற்றேர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சுயமொழியில் கல்வி புகட்ட வேண்டுமென்ற எண்ணப்பாங்கு உதயமாகியது. இதனுல் அந்நிய பாஷைகளில் கல்வி கற்பதிலும் பார்க்க பிள்ளைகள் தங்கள் மொழிகளில் கல்வி கற்க விரும்பினுர்கள். இதனுல் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் தங்கள் தாய்மொழிப் பற்றும், பாசமும் உண்டாகத் தொடங்கியது இதன்காரணமாக இலங்கையரசாங்கம், ஒவ்வொரு மொழிகளுக்கும் ஒரு தினத்தைவைத்து கொண்டாட ஊக்கமளித்தது இதற்கிணங்கவே இங்கு நாம் அகில இலங்கை தமிழ் மொழித் தினத்தைக் கொண்டாடினுல்ஒவ்வொரு பிள்ளைக்கும் தங்கள் தாய் மொழியில் கல்வி கற்க வேண்டுமென்ற அவாவும் உதயமாகும் என்பது எனது எண்ணப்பாங்காகும் என்று முருங்கன் வட்டார வித்தியாதரிசியின் கீழுள்ள ஏறக்குறைய ஐம்பதுக்கதிகமான பாடசாலைகளின் அகில இலங்கைத் தமிழ் மொழித்தினத்தின் போது மன்னுர் மாவட்ட கல்வியதிகாரி திரு. வீ. நடராசா மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்விழா முருங்கன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இவ் விழாவையொட்டி பாஓதல், சொல்வதெழுதல் பார்த்து வாசித்தல், எழுத்துப் பிரதிபண்ணல், நாடகம் முதலிய பாடசாலைப் பிள்ளைகளுக்கான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்விழாவுக்கு ஏறக்குறைய இருத்தேழுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவ மாணவிகள் பங்குபற்றினர். இவ்விழா முடிவில் முருங்கன் மகாவித்தியாலயத்தா ல் 'குமணனும், அமணனும்' என்ற நாடகமும் நானுட்டான் மகாவித்தியாலயத்தால் "கற்புக்கனல்கண்ணகி' என்ற நாடகமும் பாடசாலை மாணவ மாணவிகளால் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

இவ்விழாவை முருங்கன் வட்டார வித்தியாதரிசி வீ. கே. ஈஸ்பரபாதம் திறம்படநடாத்தினுர்.

### ஜீவகாருண்ணியம் மருந்துக்குக் கூட கிடையாது

உடுப்பிட்டி - வெள்ளி

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் ஜீவகாருண்ணியம் என்பது மருந்துக்குக் கூடக் கிடையாது என்று கரணவாய் வடக்குக் கிராம சேவையாளர் திரு. கே. சுப்பிரமணியம் புகார் செய்துள்ளார்.

கடந்த செவ்வாய்க் கிழமை நஞ்சருந்தி மாண்ட இரு பிரேதங்களின் அருகில் கிடந்த குழந்தையொன்றை அபாயகரமான நிலையில் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று நிலைமையை விளக்கினுராம் கிராமசேவையாளர்

ஆனல், ஆஸ்பத்திரி அதிகாரிகள் எவ்வித சிரத்தையும் எடுக்காது ஒரு மருந்தின் பெயரைக் கொடுத்து விலைக்கு வாங்கி வரும்படி சொன்னுர்கள். தனது கடமையையே செய்யச் சென்ற கிராம சேவையாளர் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்ற காருண்யத்தினுல் தனது சொந்தப் பணத்திலேயே விலை கூடிய அந்த மருந்தை வாங்கிக் கொடுத்தார்.

தற்போது அக்குழந்தை குணமடைந்து வருகின்றது.

— —

## திருக்கேதீஸ்வர ஆலய சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இம்மாதம் 23-ம் திகதி திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மகா அஷ்டோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறவிருக்கிறது.

## இளைஞர்கள் சமயகுரவரைப் பின்பற்றி சைவத்தைவளர்க்கவேண்டும்

காரைதீவு, வெள்ளி

'சமயகுரவர்கள் காட்டிய வாழ்க்கை நெறியை ஒவ்வொரு சைவனும் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். இறைவனின் மீது தீராத அன்பும், நம்பிக்கையும் வைத்திருப்பவர்களால் எதையும் சாதிக்க முடியும் என்பதையே அவர்களின் வாழ்க்கை வரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன இறைவனைத் தியானிக்கும்போது அந்தரங்க சுத்தியுடன் வணங்க வேண்டும். நம்பிக்கையில்லாமல் ஏனோதானே வென்று வணங்குவதால் எவ்வித பயனையும் நாம் பெற முடியாது. சைவத்தையும், தமிழையும் வாழவைக்க வேண்டிய அவசியத்தை சமயகுரவர்களின் ஒவ்வொரு செயலும் எடுத்துக்காட்டுகிறது. சமயகுரவர்களின் வாழ்க்கையைப் பின்பற்றிஇளைஞர்கள் சைவத்தை வளர்க்க வேண்டும்.

கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற 'சமய குரவர் விழா' வுக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் புலவர் த. குமாரசாமிப்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலகத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம்ஆண்டு ஜூன் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org